
# HNB GRAMEEN மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

2016 மார்ச் - ஏப்ரல் இதழ்





முறையான நேர்முகப் பரீட்சையின் நிபந்தனைகள்

பக்கம் 04



மற்றவர்களின் விமர்சனங்களால் எந்தவொரு வெற்றியும் ...

பக்கம் 07



முகாமைத்துவ நுட்பமும் ஊழியர் நோக்கும்

பக்கம் 13

சிங்கள, தமிழ் புதுவருடம் உங்களுக்கு அன்பையும், சமாதானத்தையும் பெற்றுக் கொடுக்க பிரார்த்திக்கிறோம் . . .!

வண்ணமயமான கனவுகளை மனதில் சுமந்து
குளக்கரையில் நீ சிந்திய வியர்வைத் துளிகள்
வாழ்வின் இருள் அகற்றி முன்னேற்றத்தின் சின்னமாகின
சகலருக்கும் சமாதானத்தையும், அன்பையும்
இந்தப் புத்தாண்டு கொண்டுவரும் . . .!


- மஞ்சுள


வரைபடம் - ஏ.டபிள்யு. கிறிஷான் மலிந்த, புத்தளம் கிளை

# வாழ்க்கையின் அர்த்தம்

## நூல்களுடன் வாழ்க்கையை கழித்த மனிதர்...

1856இல் அயர்லாந்தில் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் பெயர் ஜோர்ஜ். இந்தக் ஜோர்ஜின் தந்தை நெறியான வாழ்க்கை வாழவில்லை. இதனால் இந்தக் ஜோர்ஜ் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தான். இதனால், பாடசாலை வாழ்க்கையும் சீரழிந்தது. எந்தவொரு காரணமும் இன்றி பாடசாலையை வாழ்க்கையை விரும்பாமல் போனதற்கு வீட்டியல் எவரும் ஜோர்ஜுக்கு பாடசாலைக் கல்வியின் மகத்துவத்தை எடுத்துக் கூறமல் இருந்தமையாலாகும். எனினும் ஜோர்ஜின் தாய் சங்கீதம், இலக்கியம், கலை போன்றவற்றை வீட்டில் இருக்கும் போது கற்றுக் கொடுத்தார். ஜோர்ஜின் தாய் பின்னர் தந்தையைப் பிரிந்து இங்கிலாந்துக்கு சென்றுவிட்டார். இங்கிலாந்துக்கு சென்ற ஜோர்ஜ் பிரித்தானியாவின் பிரசித்தி பெற்ற நூதனசாலையின் வாசிகசாலையை தனது விருப்பமான இடமாக தேர்ந்தெடுத்துக் கொண்டான். ஜோர்ஜின் வாழ்க்கையில் மிகமுக்கியமான நிகழ்வாக அவருடைய நீண்டகால நண்பராக வாசிகசாலையை தேர்ந்தெடுத்துக் கொண்டான். அவருடைய வாழ்நாளில் நீண்ட நாட்களை வாசிகசாலையில் கழித்தார். இதன் போது அதிகளவான இலக்கியங்களையும், நாவல்களையும் விரும்பி படித்தார். சுயமாகவே புத்தகங்களை படிப்பதற்கு பழகிக் கொண்டார். பாடசாலை சென்று கல்வி கற்காமல் வாசிகசாலையிலேயே புத்தகங்களை படித்து வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். இதனால் அவருடைய அறிவுத்திறன் மேலோங்கியது. இதன் மூலம் படைப்பாக்கத்திறனையும் வளர்த்துக் கொண்டார். அவருடைய வாசிப்பு பழக்கத்தின் மூலம் முதன் முதலாக நாவல் ஒன்றை எழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் பின்னர் இலக்கியத்துறையிலும் கால்பதித்தார். தனது 42 வயதில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். திருமணத்தின் பின்னர் நடிப்புத்துறையில் முழுமையாக ஈடுபட்டார். அதன் பின்னர் நாடகங்கள் எழுதுவதற்கும் பழகிக் கொண்டார். ஜோர்ஜ் ஆங்கில மொழியை சிறப்பாக கையாளும் வல்லமை கொண்டவர். இவருடைய நாட்டியங்கள் குறுகிய காலத்தில் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்தது. இவர் பிரபல்யம் அடைவதற்கு அவ்வளவு காலம் எடுக்கவில்லை. இவருடைய உலகப்புகழ் பெற்ற நாட்டியமான "செனட் ஜோன்", மேஜர் பாபரா", "சீசர் மற்றும் கிளியோபெற்றா" ஆகியவற்றில் முன்னிலை பெற்ற சில நாடகங்களாகும். அவருடைய நாடகங்களில் சமூகத்தில் ஏற்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் மிக அழகாக தெரிவித்திருந்தார். இவர்தான் உலகப் புகழ்பெற்ற "ஜோர்ஜ் பேனார்ட்ஸோ" ஆகும்.




இவருடைய பெயரை நீங்கள் நன்கு தெரிந்திருப்பீர்கள். இவர் உலகம் முழுதும் சென்று நாடகம் மற்றும் நாவல்களை படைப்பதற்கு தேவையான ஆவணங்களை தேடுவதில் புகழ்பெற்றவராகும். இவர் இலங்கைக்கும் ஒரு தடவை வருகை தந்துள்ளார். இவர் இலங்கையை "பாராதேசய" என்று அறிமுகம் செய்தார். இவர் 1925ஆம் ஆண்டு நோபல் பெற்று புகழின் உச்சிக்கே சென்றார். அவ்வாறே இவருடைய நடிப்பும் மக்கள் மனதில் இருந்து அகலாத ஒன்றாகும். நடிப்பின் மூலம் இவர் பெரும் செல்வந்தவராக மாறினார். தான் பெற்ற செல்வத்தின் பெரும் பகுதியை கல்விக்கு செலவழித்தார். உலகத்துக்கே கல்வியை பெற்றுக் கொடுத்த நபராக திகழ்வதற்கு அவருடைய உற்ற நண்பராக திகழ்ந்த வாசிகசாலையாகும். அவருடைய வாழ்க்கையையும் உலக மக்களையும் மாற்றியமைத்தவர் இவராகும். 1950ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ஆம் திகதி இவர் இவ்வுலகை விட்டு பிரிந்தார். இவர் இந்த உலககுக்காக தியாகங்கள் செய்த காலம் 94 வருடங்களாகும். பல்வேறு சிரமங்களுக்கு தனது சொந்த முயற்சியினால் வாழ்க்கையை வெற்றி பெற்ற இவருடைய வாழ்க்கை எமக்கு நல்லதொரு முன்மாதிரி என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.




பிரேமசிறி கமகே
தலைவர், கைத்தொழில் வர்த்தக மத்திய நிலையம்



# உங்கள் அனைவருக்கும் வெற்றிமிக்க புதிய ஆண்டாக மலரட்டும் . . .

சிங்கள தமிழ் புத்தாண்டு பிறப்பினால் ஏப்ரல் மாதம் எமக்கு முக்கியத்துவமிக்க மாதமாக கருதப்படுகிறது. அதாவது சூரியன் மீன ராசியில் இருந்து மேச ராசிக்கு செல்வதால் புதிய வருடமொன்று உருகின்றமையாகும். சிங்கள, தமிழ் புத்தாண்டை நன்றி செலுத்தும் பண்பாட்டினைக் கொண்ட மாதமாக நான் கருதுகிறேன். அதாவது சகல மிருகங்களின் வாழ்க்கைக்கும் வளமான பயிர் வளர்ச்சிக்கு அடிப்படையாக திகழும் சூரிய பகவானுக்கு இந் நன்நாளில் நன்றி செலுத்தப்படுகிறது.

நிதி நிறுவனம் என்ற வகையில் நிதியாண்டின் முதலாவது மாதமாக ஏப்ரல் மாதம் எமக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. வருடம் முழுவதும் நாம் இழந்த வியர்வைக்கு பலனைப் பெற்றுக் கொள்ளும் மாதமாகும். இரவு பகல் கண்விழித்து, மழை வெயில் என்று பாராது நீங்கள் சிந்திய வியர்வை, முயற்சியின் பெறுமதியை பணப் பெறுமதியாக அளவீடும் மாதமாகும். HNB கிராமின் ஊழியர்களான எமக்கு இந்நிறுவனம் இரண்டாவது இல்லமாகும். எம்மைப் போன்று எமது குடும்பத்தை பாதுகாப்பதும் இங்கு நாம் பெறும் ஊதியத்தினாலாகும். எமது வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வதற்கும் நன்மக்களாக வாழ்வதற்கும் தேவையான புறச்சூழலை தயார்படுத்த இந்நிதி பயன்படுகிறது. இதற்காக நாம் எமது நிறுவனத்துக்கு நாம் என்றும் நன்றி உள்ளவர்களாக நேர்மையாக தொழில் புரியக்கூடியவர்களாக இருக்க வேண்டும். HNB கிராமின் ஊழியர்களான நீங்கள் உங்கள் கரங்களினால் நூற்றுக்கு நூறு வீதம் நிறுவனத்துக்காக சேவை செய்ய இந்த நிமிடத்தில் நான் உங்களுக்கு நன்றியுடன் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கடந்த 2015 கூ 2016 நிதியாண்டு முடிவில் எமது நிறுவனம் 16.8 பில்லியன் ரூபாவை கடன் தொகையாக வழங்கியுள்ளது. இதனூடாக கடந்த வருடத்தில் 1.1பில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. 2000ஆம் ஆரம்பிக்கப்பட்ட கிராமின் நிறுவனம் 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் நிறுவனத்தினால் மொத்தமாக 23 மில்லியன் ரூபாவை கடனாக வழங்கியது. அவ்விதம் பார்க்கும் போது கடந்த ஆண்டு மாத்திரம் 16.8 பில்லியன் ரூபாவை கடனாக செலுத்தியுள்ளமை எமக்கு கிடைத்த பெருவெற்றியாகும். இதன் உண்மையான வெற்றியாளர்கள் நீங்களே. இதற்காக நான் மற்றும் தலைவர் உட்பட உயர் முகாமையாளர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நான் இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்ள விரும்புகிறேன்.

**பெற்றுக் கொண்ட வெற்றியின் மகிழ்ச்சியை சிரம்தாழ்த்தி ஏற்றுக் கொள்வதுடன் புதிய நிதியாண்டில் தமது இலக்குகளை அடைவதற்கு தேவையான வலுவையும் சக்தியையும் நீங்கள் பெற்றுக் கொள்ள வாழ்த்துவதோடு, மலரும் சிங்கள தமிழ் புத்தாண்டில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் வளமான, நீண்ட ஆயுள் மற்றும் மகிழ்ச்சியான வருடமாக அமைய HNB கிராமின் நிறுவன தலைவர் உட்பட சகல ஊழியர்கள் சார்பாகவும் நான் இதயபூர்வமாக பிரார்த்தனை செய்கிறேன்.**

சமிந்த பிரபாத்
முகாமைத்துவ பணிப்பாளர் /
பிரதான நிறைவேற்று அதிகாரி




# நாம் செல்லக்கூடிய தூரம்

ஏழைகளின் வாழ்க்கையில் வெளிச்சத்தை ஏற்படுத்தும் நோக்கில் கிராமின் எண்ணக்கருவை இந்நாட்டில் பரவலடையச் செய்து பதினாறு வருடங்கள் கழிந்துள்ள காலப்பகுதியில் இருந்து வருகிறோம். பொருளாதாரச் சுமையில் சோர்வடைந்திருந்த மக்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நீண்டகால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் கிராமின் எண்ணக்கருவானது சமூகத்தில் கீழ்நிலையில் இருக்கும் மக்களின் வியர்வை துளியின் மகிமையை அறிந்து அவர்களுக்கு நிரந்தரமானதும், நம்பிக்கையானதுமான கொடுக்கல் வாங்கல் செய்யும் இளைஞர் குழுவுக்கு இந்த எண்ணக்கருவினால் வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இதனால் உங்களுக்கு அவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்ள முடியாமல் போனது. அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வது தொடர்பில் தெளிவினை ஏற்படுத்துவதற்கான விசேட பாடத்திட்டங்களை செய்ய வேண்டிய தேவை ஏற்பட வில்லை. கிராமின் அங்கத்தவர் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைவரும் உங்களை “எமது சேர்” என்ற விசேட சொற்பதத்தை கொண்டே அழைக்கின்றனர். அந்த அன்பு, கருணை போன்ற மனிதனின் நற்குணங்கள் கிராமின் எண்ணக்கருவுடன் இணைந்து அவர்களை புதிய உலகுக்கு அழைத்துச் செல்கிறது எனலாம். கிராமின் எண்ணக்கரு என்ற பதத்தின் உண்மையான அர்த்தத்தை விளங்கி கொண்டு அதற்கேற்ப செயற்படுவது இந்தத்திட்டத்தின் முக்கிய விடயமாகும். தொழில் ஒன்றை செய்வதன் மூலம் வாழ்க்கையில் உயர்நிலைக்கு செல்வதற்கான இலக்கு காணப்படும் போது அந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக எமது சேவையை பெற்றுக் கொள்ள நினைக்கும் எமது வாடிக்கையாளருக்கும் அங்கத்தவர்களுக்கும் உயர் சேவையை பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதும் எமது பொறுப்பாகும்.

இலங்கை சனத்தொகையில் 52% பெண்களாகும். இந்த எண்ணிக்கையில் எம்முடன் இணைந்து செயற்படும் தொகையானது மொத்த சனத்தொகையில் அண்ணளவாக 5% ஆகும். கிராமின் எண்ணக்கருவின் ஊடாக நாம் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பதை நன்றாக உணர்ந்து இன்னும் பலரை இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எம்மால் பலரை சந்தித்த போதும் சந்திக்காத எத்தனையோ பேர் எம்மத்தியில் இருக்கின்றனர். அவர்களை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டியதும் ஒரு சவலான விடயமாகும்.

நாட்டின் சனத்தொகையில் பிரதான இடத்தில் இருக்கும் கல்வித்துறையில் இருந்து விலகி தொழில் ஒன்றுக்காக காத்துக் கிடக்கும் பிரிவினரை கூற முடியும். இவர்கள் சுயதொழில் ஒன்றை மேற்கொண்டு நன்மை அடைவதற்கான ஆர்வம் அவர்களிடம் காணப்படுவதால் எமது எண்ணக்கருவில் அதற்கான திட்டங்கள் காணப்படுகிறது என்பதை நான் எனது தனிப்பட்ட கருத்தாக முன்வைக்க விரும்புகிறேன். இளம் முயற்சியாளர்களுக்கு கிராமின் எண்ணக்கருவின் ஊடாக ஒரு குறிப்பிட்ட அளவு கடனை வழங்கி அவர்களை மேலும் மேலும் ஊக்கப்படுத்துவதற்கான “தொனிப்பொருளை”யும் புதிய கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி கிராமின் எண்ணக்கருவின் ஊடாக ஓர் அன்புப் பாலத்தை கட்டியெழுப்ப முடியும்.

கிராமின் நிறுவனத்துடன் இவ்வளவு காலமும் நாம் கடந்து வந்த பாதையை சற்று பின்னோக்கி பார்த்தால் இதனூடாக சகோதரத்துவம், ஒற்றுமை என்ற பல விசேட குணாம்சங்கள் எமக்கு கிடைத்துள்ளதை சுட்டிக்காட்ட வேண்டும். ஒவ்வொருக்கும் உதவி செய்தல், மற்றவர்களின் துன்பத்தில் பங்கெடுத்தல், உதவி செய்தல் போன்ற உயர் குணங்கள் எதிர்காலத்திலும் கட்டிகாக்கப்படுவது உங்களது கடமையாகும். கிராமின் நிறுவனத்தில் சேவையொன்றுக்காக நாடி வரும் அனைவரையும் கௌரவமாக மதித்து, குறைந்த காலப்பகுதிக்குள் தேவையான சேவையை உயர் மட்டத்தில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயமாகும். தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அறைக்குள் முடங்கிக் கிடக்காமல் அதிசொகுசு நாட்காலியில் அமர்ந்து தொடர் பயிற்சி மற்றும் உலகம் வெறுத்த மனதுடன் செயற்படாமல் நவீன உலகை அறிந்து அதற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்வது அவசியமாகும்.

உங்களைப் போன்று நாட்டின் வளர்ச்சியிலும் பாரிய செல்வாக்கு செலுத்தும் நீங்கள், இத்துறையில் சேவையாற்றுவது போற்றுவதற்குரியதாகும். இவ்வாறு நன்மைகள் பொருந்திய புதுவருட மாதத்தில் உங்களுடன் எனது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கு சந்தோஷமான சிங்கள தமிழ் புதுவருடம் கிடைக்க வேண்டுமென முகாமைத்துவ பணிப்பாளர் உட்பட உயர் முகாமையாளர்கள் இணைந்து பிரர்த்தனை செய்கிறோம்.



அனெஸ்லி பெர்ணாந்து
பிரதி
பொதுமுகாமையாளர்



HNB கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்



# முறையான நேர்முகப் பரீட்சையின் நிபந்தனைகள்

கடன் தொகையொன்று வழங்கப்படுவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்களில் ஈடுபவர் தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்களை சரியாக பெற்றுக் கொள்வதற்கு கடன் வழங்கும் அதிகாரியினால் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் தொடர்பில் கடந்த வார இதழில் நாம் ஆராய்ந்தோம். அங்கு கடன் பெறுபவர் தொடர்பில் பெற்றுக் கொண்ட தரவுகள் சரியானது என்பதுடன் உண்மையாகவும் இருக்க வேண்டுமென்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். இதற்கு கடன் வழங்கும் அதிகாரியிடமும் சில திறமைகள் காணப்பட வேண்டும்.

கொடுக்கல் வாங்கல் செய்பவரிடம் மிகவும் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறைகளில் நேர்முகப் பரீட்சையும் ஒரு முறையாக காணப்படுவதுடன் கீழ் காணப்படும் சில நிபந்தனைகளை கையாள்வதன் மூலம் மேலும் உண்மையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

1. நேர்முகப் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் ஒருவரை அவரது கடமை நேரங்களில் விரயம் ஏற்பட்டு விட்டதே என்ற எண்ணம் ஏற்படாதவாறு அன்றைய நாள் முழுவதையும் சிறப்பாக கையாளும் திறமை கடன் வழங்கும் அதிகாரிக்கு இருக்க வேண்டும்.

2. இதன்போது தேவையற்ற வகையில் பதற்றப்படாமல் எவ்வித குழப்பங்களும் இன்றி நேர்முகப் பரீட்சை நடத்த வேண்டும்.

3. அவ்வாறே, நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் சூழலும் சுமூகமானதாக காணப்பட வேண்டும்.

4. வியாபாரம் தொடர்பாக கொடுக்கல் வாங்கல் செய்பவரிடம் கேட்கப்படும் கேள்விகள் அதனுடன் சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும். அவ்வாறே கேட்கப்படும் கேள்விகளுக்கு அவர் ∴ அவள் வழங்கும் பதிலானது கொடுக்கல் வாங்கல் செய்யும் நபரின் முகபாவனையை வைத்து எந்தளவு உண்மையானது என்பதை கடன் வழங்கும் அதிகாரி மதிப்பிடும் திறமையையும் கொண்டிருக்க வேண்டும்.

5. கொடுக்கல் வாங்கல் செய்யும் நபரின் தகவல்கள் உண்மையானது என்பதுடன் அவர் ∴ அவளினால் கடன் வழங்கும் அதிகாரிக்கு வழங்கும் பதிலானது எதேச்சையாக வழங்கப்படுகிறதா என்பதையும் கடன் வழங்கும் அதிகாரி மதிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

6. கொடுக்கல் வாங்கல் செய்யும் நபருடனான நேர்முகப் பரீட்சையின் போது தொடர்ச்சியாக கேள்விகள் கேட்கப்பட்டு உறுத்துணர்வுமிக்க வகையில் கடன் தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு கடன் வழங்கும் அதிகாரி நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

இதன் போது கடன் வழங்கும் அதிகாரி தமது சுயவிருப்புக்கு ஏற்ப விமர்சனங்களுக்காக கடமையை செய்யாமல் கொடுக்கல் வாங்கல் செய்யும் நபரின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கு ஏற்ப தேவையான கடன் தொகையை வழங்க அல்லது வழங்காமல் விடுவதற்கான பொறுப்பை ஏற்பதற்கு கடன் வழங்கும் அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும்.





# உங்களுக்கு தெரியாத நான்



**முழுப் பெயர்:** மனுவெல் தியேஸ்லாகே பிரதீப் குமார டயஸ்

**பிறந்த திகதி:** 1973 பெப்ரவரி 15

**உங்களுக்கு பிடித்த பாடசாலை**

**பாடசாலை:** நான் முதன் முதலில் களுஅக்கள புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 6ஆம் ஆண்டு முதல் பன்னிபிட்டி தர்மபால கல்லூரியில் கல்வி கற்றேன். சிறு வயதில் நான் மிகவும் கொழுத்த பையனாக இருந்தேன். கிராமப் பாடசாலைக்கு சென்ற போது கிராமத்து நண்பர்களுடன் மிகவும் சந்தேசமாக நாட்களை கடத்தினேன். மூன்றாம் ஆண்டில் கல்வி கற்ற போது மேசைக்கு சண்டைப்பிடித்து நாட்காலியில் தலையை உடைத்துக் கொண்ட சம்பவங்களும் நினைவில் உள்ளன. அந்தக் காலத்தை இன்றும் மறக்க முடியாது. கிராமியப் பாடசாலையில் கல்வி கற்றதை விட தர்மபால கல்லூரியில் கற்ற போது வயதில் பெரியவனாக இருந்ததால் சகலதும் அறிந்து வைத்திருந்தேன். பன்னிபிட்டி தர்மபால கல்லூரி எனக்கு பிடித்த கல்லூரியாக காணப்படுகிறது.

**பாடம்:** எனக்கு பிடித்த துறை என்று எதுவுமில்லை. அனைத்து பாடங்களையும் விரும்பி கற்றேன்.

**விளையாட்டு:** மரதன்

**பாடசாலைக்காலத்தில் எதிர்கால இலட்சியமாக இருந்தது:** ஒரு காலத்தில் தாரகா விஞ்ஞானத்தை கற்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. அதனுடன் தொடர்புடைய புத்தகங்களை வாசித்தேன். அவ்வாறே, கைத்தொழில் துறையில் சிறு வயது முதல் அதிக ஆசை இருந்தது. தச்சன், மேசன் வேளை, வேல்டிங் ஆகிய கைத்தொழில்களும் எனக்கு தெரியும். வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நான் இந்தத்துறைகளில் ஈடுபட்டுள்ளேன். ஏனென்றால் எனது தந்தை ஒரு மேசன் தொழிலாளியாகும். எனது தாய் வீட்டில் தைத்த ஆடைகளை சந்தைக்கு கொண்டு விற்பனை செய்வார். தரம் 5-6 கற்கும் போது மாலை நேரங்களில் பாடசாலை விட்டு வந்த பிறகு தந்தையுடன் இணைந்து அவருக்கு உதவி செய்வேன். இதற்கு எனது தந்தை 10-15 ரூபா பணத்தை கை செலவுக்கு தருவார். களுஅக்கல பஸ்ஸில் ஏறி கொழும்புக்கு சென்று அம்மாவுக்கு தைப்பதற்கு தேவையான துணிகளை மொத் தமாக பெற்றுக் கொண்டு இரவு வேளைகளில் பஸ்ஸின் என்ஜினுக்கு அருகில் பார்சலாக வைத்துக் கொண்டு வருவதை அவிஸாவளை, இரத்தினபுரி பஸ் சாரதிகளுக்கு சிறு பையனான என்னை நன்கு பரீட்சயம் உள்ளதை தெரிவிக்க விரும்புகிறேன். நான் இவ்விதம் சகல துறைகளிலும் அனுபவம் பெற்ற நான், சாதாரண தரம், உயர்தரம் கல்வி கற்ற போது விமானியாக வரவேண்டுமென்ற ஆசை இருந்தது. எனினும் பொருளாதார சுமை காரணமாக அது வெறும் கனவாக மாத்திரமே இருந்தது.

**முதல் தொழிலும் மிகவும் விருப்பமாக செய்த தொழிலும்:** நான் உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றி இரண்டு நாட்களில் ஹேலீஸ் நிறுவனத்தில் தொழில் ஒன்றில் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு Training Field Technician ஆக இணைந்து கொண்டேன். எனக்கு 1050.00ரூபா மாதாந்த சம்பளம். நான் எமது வாடிக்கையாளரின் வீடுகள், காரியாலயங்களுக்குச் சென்று எமது நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட பொருட்களை பழுதுபார்த்து கொடுப்பது எனது வேளையாகும். நான் இன்போமெடிக்ஸில் வேளை செய்ய வேண்டுமென்ற ஆசை இருந்தது. நான் ஒன்றரை வருடத்தில் சுமார் 12 நேர்முகப் பரீட்சைகளில் தோற்றினேன். இறுதியாக எனது இலக்கை பூர்த்தி செய்யும் தொழிலில் இணைந்து கொண்டேன். அதுதான் எனது நிரந்தர தொழில். அங்கு நான் மூன்றரை வருடம் தொழில் புரிந்தேன். கிராமினைப் போலவே இன்போமெடிக் நிறுவனத்தில் வேலை செய்த நாட்களையும் மறக்க முடியாது.

**வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான நாட்களும், துன்பத்தை ஏற்படுத்திய சம்பவங்களும்:** வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான நாட்கள் என்று ஒன்றில்லை. வாழ்க்கையில் சந்தோஷமான நாட்கள் பல உள்ளன. எனது வாழ்க்கையில் மிகவும் துன்பமான நாளாக எனது தந்தையின் இழப்பாகும். அது 2000ஆம் ஆண்டளவில். அப்போது நான் சவுதி அரேபியாவில் தொழில் புரிந்தேன். எனது தந்தைக்கு 13 தடவைகள் மாரடைப்பு ஏற்பட்டது. இவ்வளவு தடவைகள் மாரடைப்பு ஏற்பட்டமையை ஒரு பிரச்சினையான விடயமாகும். எவ்வாறாயினும் தந்தையின் இழப்பு எனக்கு பாரிய சோகத்தை ஏற்படுத்திய சம்பவமாக கருதுகிறேன்.

**கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பொன்று கிடைத்தால் வாழ்க்கையில் எடுத்துக் கொள்ளும் சிறந்த காலப்பகுதியும் அதற்கான காரணமும்:** உயர்தரம் கற்ற பின்னரான காலத்துக்கு செல்வதாக இருந்தால் . . . இன்னும் சிறப்பாக அந்தக் காலப்பகுதியை சரியாக பயன்படுத்தியிருக்கலாம் என்று கருதுகிறேன்.

**வாழ்க்கையில் இழந்த பெறுமதிக்க நபர் அல்லது சந்தர்ப்பம்:** எனக்கு அவ்வாறான நபர்களோ சந்தர்ப்பங்களே இல்லை.

**மாற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களிடம் காணப்படும் குறைபாடுகள்:** முன்பு எனக்கு முன்கோபம் இருந்தது. இப்போது இதனை கட்டுப்படுத்த பழகிக் கொண்டுள்ளேன். இதற்கு எனது மனைவியே காரணம். இன்னும் இதனைக் கட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

**விருதுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கிறதா?** நிச்சயமாக. ட



பருகுவதில். நான் அதிகளவு விருதுகளை பெறும் தொழில் ஒன்றை தெரிவு செய்துள்ளேன் என்று நினைக்கிறேன். நான் இந்தத் துறையில் பதவி உயர்வு பலவற்றைப் பெற்றுள்ளேன்.

**உங்கள் வாழ்க்கையில் மிகவும் கவர்ந்த நபர், அவரிடம் காணப்படும் சிறந்த பண்புகள்:** பேராசிரியர் குணபால நாணயக்கார. வெளிவாரி பல்கலைக்கழக பணிப்பாளர். அவரிடம் காணப்படும் விடாமுயற்சி, சரியான திட்டமிடல் மூலம் தீர்மானம் எடுக்கும் குணம். . . நான் அவரைப் போன்ற நபராக வரமுடியுமாக இருந்தால்.

**முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்:** முதல் தொழில் புரிந்த போது பஸ்ஸில் சென்று சந்தித்த அந்த சிறுமி. எனினும் அந்தக் காதல் சற்று வித்தியாசமானது. நான் அவளை நேசிக்கும் போது அவள் என்னை புறக்கணித்தாள். நான் புறக்கணித்த போது அவள் என்னை நேசித்தாள். நிரந்தரமான காதலாக நான் எனது மனைவியை சந்தித்ததை கருதுகிறேன். அவள் அனோமா திஸாந்தி. அவளை நான் ஐரி இல் சந்தித்தற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். நான் திருமணம் முடிக்க இருந்த போது பல பெண்களை தேடித்திரிந்து கொண்டிருந்த போது இணையத்தில் திருமண தொடர்பு பகுதியில் தேடிய போது எனக்கு அனோமாவின் தகவல்கள் கிடைத்தன. அதில் அவளுடைய சகோதரனின் மெயிலை எடுத்து சந்திப்பதற்கான நேரமொன்றை கேட்டேன். அவள் அவளுடைய சகோதரனுடன் வருகை தந்தாள். நான் சற்று கருமை நிறமாக இருந்ததால் ஆரம்பத்தில் என்னை வேண்டாமென்று கூறினாலும் பின்னர் என்னை நேசித்தாள்.

**அவளிடம் காணப்படும் விசேட அம்சங்கள்:** திட்டமிடுவதில் என்னை விட முன்னிலையில் இருக்கிறாள்.

**உங்கள் வாழ்க்கை தொடர்பில் திருப்தியடைகிறீர்களா:** உண்மையில் திருப்தியடைகிறேன். நான்



மற்றவர்களுடன் தொடர்புகளை பேணும் நபராகும். அவ்வாறே சிலவேளை . . . சந்தர்ப்பங்களும் உண்டு.

**உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனையாக கருதுவது (terning Point) :** சில வருடங்களுக்கு முன்னர் நான் வெளிநாட்டுக்கு தொழில் வாய்ப்புக்காக சென்றிருந்தேன். எமது குடும்பம் பொருளாதார ரீதியில் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருந்த சந்தர்ப்பத்தில் எனது தாய் மற்றும் சகோதரிகள் மூவரையும் அந்த சிக்கலில் இருந்து மீட்க எனது வெளிநாட்டு தொழில் எனக்கு உதவியாக இருந்தது.

**உங்களுக்கு பிடித்த பாடகர்:** W.D. அமரதேவ அவர்கள்

**பாடல்:** அவரின் சகல பாடல்களும்

**திரைப்படம்:** The conspiracy theory

**நாவல்:** The notebook – by Jhon Grism

**எதிர்கால இலக்கு:** எமக்கு தொடர்ந்து இந்தத் தொழிலில் இருக்க முடியாது. அந்தக் காலம் வரும் போது எனக்கென்று ஒரு வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற இலக்கு எனக்குள் இருக்கிறது. பெரும்பாலும் ஐ.ரியுடன் தொடர்புடைய வியாபாரமாக இருக்க வாய்ப்பில்லை. எனக்கு விருப்பமான ஒன்றை (ஆப்பம் விற்பனை செய்வதாக இருந்தாலும் பரவாயில்லை) ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் நான் சிறந்த சமையல்காரர் என்பது அனைவருக்கும் தெரியாது.

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி



## “நான் மனைவியை தெரிவு செய்தமைக்கு தகவல் தொழில்நுட்பத்துறைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்”

– பிரதீப் டயஸ்

பிரிவுத் தலைவர் - தகவல் தொழில்நுட்ப பிரிவு

## எச்.என்.பி. கிராமின் அதன் உயர் முகாமைத்துவத்தை பலப்படுத்துகின்றது





இலங்கையில் வங்கியல்லாத நிதித் துறையில் முன்னனி நிதி நிறுவனமாவதற்கான தனது உறுதியான இலக்கு நோக்கிய பயணத்தின் போது எச்.என்.பி. கிராமின் பினான்ஸ் லிமிடெட் பணிப்பாளர் சபையானது நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்தில் இரண்டு புதிய நியமனங்களைச் செய்துள்ளது.

2016ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரத்தக்கதாக கிளை வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளராக திருமதி கிரு'ந்தி தம்பையா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். வங்கித் துறையில் 42 வருட கால அனுபவத்தைக் கொண்ட திருமதி தம்பையா அவர்கள் இத் துறையில் தேர்ச்சி பெற்ற தொழில் வல்லுநராவார். சிரே'ட சுயாதீனப் பணிப்பாளராக 2013 ஆம் ஆண்டு எச்.என்.பி. கிராமின் நிறுவனத்துடன் இணைவதற்கு முன்னர் இவர் 16 ஆண்டுகளாக எச்.என்.பீ. பீ.எல்.சீ இன் கூட்டாண்மை முகாமைத்துவ உத்தியோகத்தராக சேவையாற்றியதுடன் எச்.என்.பீ. பீ.எல்.சீ இன் பிரதிப் பொது முகாமையாளர் - கிளை வலைமைப்பு பதவியையும் வகித்தார். இதன் பின்னர் இவர் 2014 ஆண்டு இறுதியின் போது கம்பனியின் சிரே'ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நிறைவேற்றுப் பணிப்பாளர் - கிளை வலையமைப்பின் ஊடாக திருமதி தம்பையாவினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் கம்பனியின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு பாரிய பங்களிப்பை வழங்கும்.

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி தொடக்கம் திரு பிரியலால் அரங்கல அவர்கள் எச்.என்.பி. கிராமின் நிறுவனத்தின் பிரதான தொழிற்பாட்டு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதான தொழிற்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பதற்கு முன்னர், திரு அரங்கல அவர்கள் எச்.என்.பி. கிராமின் நிறுவனத்தின் பொது முகாமையாளர்- நிதி பதவியை வகித்தவராவார். இவர் நுண் நிதித்துறையில் 12 ஆண்டுகளுக்கும் அதிகமான அனுபவத்தைக் கொண்டவராவார். அவரது சிறப்புமிக்க சேவைக்காலத்தில் கம்பனியில் பல சிரே'ட பதவிகளை வகித்தவராவார்.

## HNB கிராமின் குத்தகை சேவை தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தல்

HNB கிராமின் நிறுவனம் அண்மையில் அறிமுகப்படுத்திய HNB கிராமின் குத்தகை சேவை தொடர்பாக மக்களுக்கு அறிவுறுத்தும் சந்தைப்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்வு பெப்ரவரி மாதம் 18,19ஆம் திகதிகளில் HNB கிராமின் நகரக் கிளையில் நடைபெற்றது. இதன் போது மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.



HNB GRAMEEN

## "மெஹெவர"உதவி நிதியிலிருந்து நன்மை பெற்றவர்கள். . .

...மனிதன் எந்த சந்தர்ப்பத்தில் நோய்வாய்ப்படுவான் என்பது எமக்கு தெரியாது. அந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஏதேனும் வகையில் உதவி செய்ய முடியுமானால், . . அவ்வாறான நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே மெஹெவர உதவி நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

எச்.என்.பி கிராமின் காரியாலயத்தின் உங்களது பண உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட "மெஹெவர" உதவி நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் எமக்கு பலரிடம் இருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும் தெரிவு செய்யப்பட்ட நன்மையடைந்தோர் கடந்த 2015 நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஒரு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐந்நூறு ரூபா (174,500/-) வை நன்கொடையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே இதுவரை நிதி உதவி பெற்றவர்கள் பலரின் தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

**01. வெலிமடை கிளை**
அங்கத்தவர்- எஸ். சந்தேஷ்வரி
உதவி பெற்றவர்- எஸ். சந்தேஷ்வரி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: இருதய சத்திரசிகிச்சை



**02. ஜாஎல கிளை**
அங்கத்தவர்: பீ. நிஷங்சலா
உதவித்பெற்றவர்: பீ. நிஷாந்த (கணவர்)
உதவி பெற்ற காரணம்: இருதய சத்திரசிகிச்சை



**03. வெலிமடை கிளை**
அங்கத்தவர்: எம்.எம்.எம். சந்திமா
உதவித்பெற்றவர்: சமோத் (மகன்)
உதவி பெற்ற காரணம்: இருதய சத்திரசிகிச்சை
உதவித்தொகை: ரூ.5,750 (சக்கர நாட்காளி வாங்குவதற்காக)



**04. நாவலப்பிட்டி கிளை**
அங்கத்தவர்: எல்.ஏ.அனுலாவதி
உதவித்பெற்றவர்: எல்.ஏ.அனுலாவதி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: கண் (கெட்ரெக்) வைத்தியம்



**05. ஜஎல கிளை**
அங்கத்தவர்: டபிள்யு.ஜீ.எஸ். லக்ஷிகா
உதவித்பெற்றவர்: சீ.ஹேரத் (கணவர்)
உதவி பெற்ற காரணம்: சத்திர சிகிச்சை



**06. சிலாபம் கிளை**
அங்கத்தவர்: ஏ.ஜி.எல்.ஏ. குணவர்தன
உதவித்பெற்றவர்: எம்.பீ.ஏ. அபேசிங்க (கணவர்)
உதவி பெற்ற காரணம்: இருதய சத்திரசிகிச்சை



**07. நிக்கவரெட்டிய கிளை**
அங்கத்தவர்: டீ.எம். சுவர்ணா
உதவித்பெற்றவர்: ரி.ஜீ. அனுர (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவுக்காக



**08. பதவிய கிளை**
அங்கத்தவர்: ஆர்.எம். நயனா
உதவித்பெற்றவர்: எம்.ஜீ. விஜய (கணவர்)
உதவி பெற்ற காரணம்: இருதய சத்திரசிகிச்சை



**09. அநுராதபுரம் கிளை**
அங்கத்தவர்: ஜே.பீ. வசந்த
உதவித்பெற்றவர்: ஆர்.எம். சிசிர (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவு



**10. வென்னப்புவ கிளை**
அங்கத்தவர்: எஸ்.ஏ.கே.ஏ. சஞ்சீவனி
உதவித்பெற்றவர்: எஸ்.ஏ.கே.ஏ. சஞ்சீவனி (அங்கத்தவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவு



**11. கந்தளாய் கிளை**
அங்கத்தவர்: டபிள்யு.டீ.கே. மேகலா
உதவித்பெற்றவர்: என்.பீ.ஆர். விமலசேன (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவு



**12. கந்தளாய் கிளை**
அங்கத்தவர்: ஜீ.பி.டபிள்யு. நந்தா
உதவித்பெற்றவர்: கே.ஜீ.தயானந்த (கணவர்)
உதவி பெற்ற காரணம்: வைத்திய செலவு



**மெஹெவர உதவி நிதியம் இன்னும் சிறப்பாக செயற்படுவதற்கு உங்களது ஆக்கபூர்வமான யோசனைகளை உள்வாங்கப்படுவதுடன் உங்களுடைய கருத்துக்களை 0710292018 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு சுதேஷ் பெரேரா என்பவருக்கு அனுப்பி வைக்கவும்.**



டெல்கானாவின் How to win Friends & influence people என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

# மற்றவர்களின் விமர்சனங்களால் எந்தவொரு வெற்றியும் தடுக்கப்படுவதில்லை

## பாகம் 3

சுயவிருத்தி (SELF DEVELOPMENT) தொடர்பாக உலகின் முதலாவது நூலாக கருதப்படுவது டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நூலாகும். இந்த நூல் 1937ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதுடன் சுமார் 34 மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது. நூல் வெளியிடப்பட்ட நாள் முதல் இன்று வரை சுமார் 78 ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் மக்கள் மத்தியில் இன்றும் பிரசித்திபெற்ற நூலாக காணப்படுகின்றது. இந்த நூலின் பிரதிகள் 20,000,000 வரை வெளியிடப்பட்டுள்ளதுடன் உலகின் பல நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. டெல்கானா 1955ஆம் ஆண்டு மரணமானார். அவரினால் படைக்கப்பட்ட இந்த நூல் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டதுடன் எவ்விதம் மக்கள் சுயமாக விருத்தியடைவது என்பது தொடர்பாக மிகவும் ஆக்கப்பூர்வமான பல விடயங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு



உலகப்புகழ்பெற்ற மனநல விசேட நிபுணரான பீ.எப்.ஸ்கீனர் விலங்குகள் எவ்விதம் செயற்படுகின்றன என்பது தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை செய்துள்ளார். இவரின் ஆய்வுகளுக்கு அமைய நல்ல நடத்தைகளை கொண்ட விலங்குகளுக்கு பரிசுகள் வழங்கப்படும் போது அந்த விலங்குகள் நன்மையான விடயங்களை செய்வதற்கு அதிக ஆர்வம் காட்டுகின்றன. தீய செயல்களை செய்யும் விலங்குகளை தண்டிக்கும் அவ்வளவு இலகுவாக நற்செயல்கள் செய்யும் விலங்கினமாக மாறுவது கஷ்டமான விடயமாகும்.
பிற்காலத்தில் அந்த விசேட மனநல நிபுணர் மனிதர்களிடத்திலும் இந்த விடயம் தொடர்பில் ஆய்வுகளை செய்தார். இங்கு குற்றங்கள் செய்யும் நபர்களுக்கு எதிராக விமர்சனம் செய்யப்பட்டது. இதன் பெறுபேராக மனிதர்கள் விமர்சனம் செய்வதை விரும்புகிறார்கள் இல்லை.
மற்றவர்களை விமர்சனம் செய்வது தொடர்பாக இன்னுமொரு சிரேஷ்ட மனநல நிபுணரான ஹென்ஸ் செலி இவ்விதம் கூறுகிறார்.
நாம் செய்யும் பல விடயங்களை மற்றவர்களினால் ஏற்றுக் கொள்வதை பாரிய அர்ப்பணிப்பாக நாம் கருதுகிறோம். அவ்வாறே எமது செயற்பாடுகளை மறுதலிக்கும் போது அதனை ஏற்றுக் கொள்ள தயக்கம் காட்டுகிறோம்.
இதற்கு மேலதிகமாக நாம் எதிர்பார்க்கும் ஒரு விடயத்தில் நன்மையும், தீமையும் இருக்க முடியும். இதில் எவ்வளவு குறைபாடுகள் உள்ளன? நாம் இது தொடர்பில் ஓர் உதாரணத்துடன் ஆராய்ந்து பார்ப்போம். இதன் போது நீங்கள் குறைகூறும் செயற்பாட்டை அறிந்து கொள்ள முடியும்.
அமெரிக்காவின் ஒக்லோஹேம் பிராந்தியத்தின் எனிட் பிரதேசத்தில் வாழ்ந்த ஜோர்ஜ் பி. ஜோன்ஸ்டன் பொறியியல் நிறுவனத்தில் சேவையாற்றி வந்தார். அங்கு அவர் பாதுகாப்பு இணைப்பதிகாரியாக தொழில்புரிந்தார். அவருடைய தொழிலின் ஒரு பகுதியான வேலையில் ஈடுபடும் சக ஊழியர்கள் வேலைநேரத்தின் போது பாதுகாப்பு அங்கியை ஹெல்மட் அணிந்து கொள்கிறார்களா என்பதை கவனித்துக் கொள்வதாகும். பல ஊழியர்கள் இந்த பாதுகாப்பு அங்கியை அணிவதில்லை என்பதை அவர் அறிந்து கொண்டார். தொழிலில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பு அங்கியை அணிந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது நியமனக் கடிதத்திலும் இந்த விடயம் ஒரு நிபந்தனையாக கூறப்பட்டுள்ளது என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தினார். எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அவர் இருக்கும் போது அந்த அங்கியை அணிந்து கொண்டாலும், அவர் அங்கிருந்து சென்றவுடன் அதனை கழற்றி வீசிவிடுவதை காணக்கூடியதாக இருந்தது.
இரண்டாவதாக புதிய உத்தியைக் அவர் கையாண்டார். இதனை அணிவதற்கு கடினமாக இருக்கிறதா என்று அவர்களிடம் வினவினார். அவ்வாறே இது உங்களின் தலையை மூடுவதற்கு போதுமாக இல்லையா என்று கேட்டார். இதன் மூலம் தலையை மூடுவதன் மூலம் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கிறது என்று கூறினார்.
ஜோர்ஜ் பி. ஜோன்ஸ்டன் இவை அனைத்தையும் சட்டதிட்டங்கள் என்று கூறாமல் அந்நியோன்யமாக உறவாடி தெரிவித்த ஒரு முறையாகும். இதன் பின்னர் வேலைத்தளத்தில் பாதுகாப்பு தலைக்கவசம் தனது தனிப்பட்ட பாதுகாப்பு கருதி அணிய ஆரம்பித்தார்கள்.
மற்றவர்களின் குறைகளை அடையாளம் காண்பதைப் போன்று. மற்றவர்களை விமர்சனம் செய்வது பயனற்ற செயற்பாடு என்பதை உலகத்தின் சாட்சியங்கள் எமக்கு உணர்த்துகின்றன என்பதை வரலாற்றில் இருந்து அறியக்கிடைக்கிறது.
அமெரிக்க அரசியலில் கொடிகட்டிப் பறந்த இருவர்களான தியோடர் ரூஸ்வெல்ட் மற்றும் ஜனாதிபதி விலியம் ஹோவார்ட் தாப்ரி ஆகியோரிடையே காணப்பட்ட மக்கள் மத்தியிலான புகழ் ஒரு பிரச்சினையாக ஆரம்பித்து விமர்சனமாக முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரச்சினையினால் அந்நாட்டின் ரீபப்ளிக் கட்சி இரண்டாக பிளவுபட்டது. வுட்ரோ வில்சனுக்கு வெள்ளை மாளிகையைப் பெற்றார். அவ்வாறே முதலாவது உலக மகா யுத்தத்தைப் போன்று அமெரிக்காவின் வரலாறும் மாற்றமடைந்தது.
தியோடர் ரோஸ்ட்வெல்ட் 1980ஆம் ஆண்டில் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேறினார். பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் தாப்ரர் அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார். இதன் மூலம் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அனைத்தும் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று சிறப்பாக இடம்பெற்றது. தாப்ரர் மற்றும் அவரின் மதவாத செயற்பாடுகளை ரோஸ்ட்வெல்ட் பகிரங்கமாக குற்றம்சாட்டியதுடன் இருவருக்கும் இடையில் பிரச்சினை உருவானது.
ரோஸ்ட்வெல்ட் புல்முஸ் கட்சி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியை உருவாக்கினார். இதன் மக்கள் மனதை மாற்றுவதற்கு ரோஸ்ட்வெல்லால் முடிந்தது.
இறுதியில் தாப்ருவுக்கும் அவருடைய ரீபப்ளிக் கட்சிக்கும் இரண்டு பிராந்தியங்களை மாத்திரமே வெற்றி பெற முடிந்தது. இது அமெரிக்க வரலாற்றில் ரீபப்ளிக் கட்சிக்கு கிடைத்த பாரிய பின்னடைவாகும்.
இவ்வாறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு தாப்ருதான் காணம் என்று ரோஸ்ட்வெல்ட் குற்றஞ்சாட்டினார். எனினும் ஜனாதிபதி தாப்ரு தனது பிழையையும் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக் கொண்டாரா? உண்மையாக இல்லை. கண்களில் நீர் ததும்பியவாறு இவ்வாறு பதிலளித்தார்.
“எனக்கு கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி தற்போது காணப்படும் சூழ்நிலையில் நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை என்னால் செய்திருக்க முடியுமென்று நான் நினைக்க வில்லை” என்றார்.

குற்றஞ்சாட்டினதும் விமர்சனத்தினதும் செயற்பாட்டு உருவம் ஒன்றாகும். ரோஸ்ட்வெல்ட் எந்தளவு விமர்சனம் செய்தாலும் தாப்ரு தனது குற்றங்களை ஏற்றுக் கொள்ள வில்லை. அதற்கு பதிலாக தாப்ரு தனது பிழைகளை மறைத்து அதற்கு நியாயம் கற்பிக்கவே முயற்சி செய்துள்ளமையை வெளிக்காட்டுகிறது.

வாசனா லியானாராச்சி

HNBகிராமின்

## கிளையின் செயற்பாடுகள்

# புதிய உத்திகளுடன் தமது வியாபாரத்தில் வெற்றி பெறுவதற்கான கட்டமைப்பை நாம் அவர்களுக்கு பெற்றுக் கொடுப்போம்

## எச்.என்.பி.கிராமின் யாழ்ப்பாண கிளை




ஏ9 வீதியின் வவுனியா, மாங்குளம், பரந்தன் ஊடாக இலங்கையின் வடமாகாணத்தின் தலைநகராகவும் இலங்கையின் மிகப்பெரிய நகரமான யாழ்ப்பாணம் நோக்கி எமது வாகனம் மெதுவாக பயணித்துக் கொண்டிருந்தது. இலங்கையின் வரலாற்றில் பல்வேறு முரண்பாடுகள் தோற்றம் பெற்று தற்போது வளர்ச்சி பெற்ற நகரமாகவும் சுமார் 600,000இலட்சத்துக்கும் அதிகமான சனத்தொகையைக் 1025 கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டமைந்த விசாலமான பிரதேசமாகும். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணத்தில், சுயதொழில் முயற்சியில் அதிகளவானவர்கள் ஈடுபடுவதுடன், அதன் மூலம் தனது ஜீவனோபாயத்தைக் சிறப்பாக முன்னெடுப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறான புறச்சூழலுக்கு மத்தியில் யாழ்ப்பாண நகரில் HNB கிராமின் கிளை நிறுவப்பட்டது சுமார் பதின்நான்கு வருடங்களுக்கு முன்பாகும். அது 2002ஆம் ஆண்டு மே 26ஆம் திகதியாகும். HNB கிராமின் கிளை வலையமைப்பில் மூன்றாவது இடத்தில் உள்ள யாழ்ப்பாண கிளை தொடர்பில் “கிளை செயற்பாடுகள்” என்ற பகுதியின் ஊடாக ஆராயலாம் என்று நினைக்கிறோம்.


ஜோசப் ஜோன்
பிரதேச முகாமையாளர்


எஸ்.ரொ‘ான்
பிரதேச கணக்காளர்


வே. ஸ்ரீ தயாபரன்
கிளை முகாமையாளர்


ரி. மணிவண்ணன்
முகாமையாளர் நுண்நிதி


ஜே.பிரதாபன்
உதவி முகாமையாளர்

கிராமின் வரலாற்றில் பதின்நான்கு வருட கோத்திரக் கதையின் சாராம்சத்தை மிகவும் சுவாரஸ்யமாக எமக்கு தெரிவித்த யாழ்ப்பாண கிளை முகாமையாளர் வேலாயுதன ஸ்ரீ தயாபரனின் நேர்காணலை இங்கு குறிப்பிட நாம் விரும்புகிறோம்.

14 வருடத்துக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட எமது பயணத்தில் இம்மாகாண மக்கள் மனங்களில் யாழ்ப்பாண கிளை வேரூன்றி காணப்படுகிறது எனலாம். ஏனெனில் அவர்களின் வெற்றிக்கு நல்லதொரு அடித்தளமாக HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனம் செயற்பட்டு வருவதை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. விசேடமாக 98%மான தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் HNB கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவர் எண்ணிக்கை, நெல்லியடி சேவை மத்திய நிலையத்தையும் இணைத்து பார்க்கும் போது 9000 வரை காணப்படும் எனலாம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் விசேடமாக மரக்கறி செய்கையில் அதிகளவான மக்கள் ஈடுபடுகிறார்கள். குறிப்பாக சிறிய வெங்காயம், நிலக்கடலை, செத்தல் மிளகாய், பீட், கிழங்கு, கரட், கோவா போன்ற பயிர்ச்செய்கைகளில் ஆர்வத்துடன் செய்து வருகிறார்கள். விவாசாய செய்கைக்கு மேலதிகமாக கருவாடு, மீன் போன்ற கடற்றொழிலிலுடன் தொடர்புடைய கைத்தொழிலாளர்களும் அதிகளவானவர்கள் வியாபித்துள்ளதை காணக்கூடியதாக இருக்கிறது. எமது நிறுவனத்துடன் இணைந்து தமது கைத்தொழிலை வெற்றிகரமாக நடத்திய, நடத்திக் கொண்டிருக்கும் அங்கத்தவர்களுக்காக இதுவரையில் 1083 மில்லியன் ரூபாவை கடந்த காலத்தில் மாத்திரம் கடனாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


எச்.என்.பி.கிராமின் யாழ்ப்பாண கிளை உத்தியோகத்தர்கள்

எமது நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு திடீரென ஏற்படும் நிதிப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் 97மில்லியன் ரூபாவை அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கக் கூடியதாக இருந்தது. காப்புறுதி நிதியத்தின் மூலம் 448,380 ரூபா பணம் எமது நிறுவன அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது..

இன்று எமது கிளை மத்திய நிலையங்கள் பளை, வேலணை, காங்கேசன்துறை வரை பரந்து காணப்படுவதுடன் யாழ்ப்பாண குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் எமது கிளை நிறுவனங்கள் பரந்து காணப்படுகின்றன. அவ்வாறே, நெல்லியடி பிரதேசத்திலும் புதிதாக சேவை மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எமது அங்கத்தவர்களுக்கு மேலும் சிறப்பான சேவை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கடன் வழங்கி கைத்தொழிலை மேலும் வினைத்திறனாக்குவதற்கு தேவையான அடித்தளம் இடப்படுவதுடன் அவர்களின் கைத்தொழில் விருத்திக்கு தேவையான ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் தொடர்ச்சியாக முயற்சிகளை செய்து வருகிறோம்.

மத்திய நிலைய தலைவிகளுக்காக பயிற்சி செயலமர்வுகளை நடத்தி கைத்தொழில் தொடர்பான நிதி நிர்வாகம், முகாமைத்துவம் போன்ற துறைகள் தொடர்பாக அங்கத்தவர்களுக்கு அறிவுறுத்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டு வருகின்றோம். நிதி நிறுவனங்கள் பாரிய அளவில் காணப்படும் நகரமான யாழ்ப்பாணத்தில் போட்டி நிறுவனங்கள் காணப்பட்டாலும் அவற்றுக்கு சிறப்பாக முகம் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது.

### எச்.என்.பி.கிராமின் யாழ்ப்பாண கிளை ஊழியர் படை

பிரதேச முகாமையாளர்
ஜோசப் ஜோன்
பிரதேச கணக்காளர்
சிதம்பரம்பிள்ளை ரொஷான்
கிளை முகாமையாளர்
வே. ஸ்ரீ தயாபரன
உதவி கிளை முகாமையாளர்
ஜே. பிரதாபன்
எம். நிரோஷன்
நுண்நிதி முகாமையாளர்
ரி. மணிவண்ணன்
எஸ்.லோகேஸ்
சிரே‘ட நிறைவேற்று சேமிப்பு மற்றும் நிர்வாகம்
எம். ஜயமோகன்
கே. வருணதாஸ்
கனி‘ட நிறைவேற்று நுண்நிதி
ரி. கஜன்
கிளை நிறைவேற்று (நிதி)
கே. பவிராஜ்
எஸ்.கஜேந்திரன்
கனி‘ட கடன் நிறைவேற்று (நுண்நிதி)
ஜீ.கோபிராஜ்
கடன் நிறைவேற்று
பீ. நிமலதாசன்
கே. கிருஷ்ணகேசன்
எஸ்.சிந்துஜன்
எஸ. காஜிபன்
எம். சிவகுமார்
எம். பிரதீபன்
ஆர்.கோபிதாஸ்
எஸ்.பவீந்திரன்
ரி.ரவிராஜ்
எஸ்.விநோதன்
கே.தனூசன்
என். துசாந்தன்
எஸ். யாலகன்
கே. பரமேஸ்வரன்
பயிற்சி கடன் நிறைவேற்று
ஆர். கேஷவர்தன்
பீ. பவீந்திரன்
கனி‘ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று – சேமிப்பு
என். காஜிபன்
பயிற்சி நிறைவேற்று
எல். ஸ்ரீகாந்தன்
பயிற்சி நிறைவேற்று (சிறியளவிலான கைத்தொழில்)
ஜே. அபிராமி

ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
டிஷான்




## எனது வாழ்க்கையில் துன்பமின்றி மீண்டு வருவதற்கான நிதி உதவியைப் பெற்றுக் கொடுத்தது HNB கிராமின்



மனைக் கைத்தொழிலின் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதணிகளை உற்பத்தி செய்து வந்த திருமதி துலிகா திஸாநாயக்க 2007ஆம் ஆண்டு HNB கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் மசாளத்தூள்களை பக்கற் செய்து சந்தைப்படுத்துவதற்காக கிராமின் நிறுவனத்தில் கடனைப் பெற்றுக் கொண்ட துலிகா அந்த வியாபாரத்தில் நட்டமடைந்த பின்னர் கிராமின் நிறுவனத்தில் 50,000ரூபா கடனைப் பெற்று பாதணிகளை உற்பத்தி செய்யும் வியாபாரத்தை ஆரம்பித்தார்.

“நான் அந்தப் பணத்தைக் கொண்டு பாதணி அச்சுகளை கொள்வனவு செய்தேன். வியாபாரத்தில் எனது கணவரும் எனக்கு பக்கபலமாக இருந்தார். எனது முதல் வியாபாரம் நட்டமடைந்த போது எனது வாழ்க்கையில் துன்பமின்றி மீண்டு வருவதற்கான நிதி உதவியை வழங்கியது HNB கிராமின். அதனை ஒரு போதும் மறக்க முடியாது. இன்று எனது வியாபார செயற்பாட்டில் மேலும் ஒருவருக்கு தொழில்வாய்ப்பை அளிக்கக்கூடிய அளவில் எனது வியாபாரம் வளர்ச்சியடைந்துள்ளது.

**ஆர். துலிகா திஸாநாயக்க, இகல சிங்காராம, நொச்சியாகம**

## சதாகாலமும் இம்மண்ணை நம்பியிருக்கும் எங்களால் அலைந்து திரிய நேரமில்லை . . .



கண்ணுக்கெட்டிய தூரம் செழிப்பான மண்ணில் பச்சைப் பசேலென காணப்படும் காய்கறிகளைப் பார்த்த எமக்கு அமைதியான சூழலாக தென்பட்டது. வாழை, பப்பாசி, சோளம், கத்தரி, கறிமிளகாய் போன்ற காய்கறிகள் வளமான மண்ணில் செழிப்பாக வளர்ந்து காணப்பட்டன. திருமதி பி. சித்ராணி இதன் உரிமையாளராகும். அவருடைய குரலில் . . .

எனது கணவரின் 15 வயதில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய ஜீவனோபாய மார்க்கமாகும். நான் திருமணம் முடித்த பிறகு நானும் கணவருக்கு உதவி செய்தேன். 2006ஆம் ஆண்டு ஏற்பட்ட எமது கஷ்டத்துக்கு கிராமின் நிறுவனம் தான் பக்கபலமாக இருந்தது. விவசாயத்துக்கு தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் குறிப்பாக நீர்க்குழாய், விவசாய உபகரணங்கள், விதைகள் போன்றவற்றை வாங்குவதற்காக கிராமின் கடன் திட்டம் எமக்கு உதவி புரிந்தன. காலையில் தோட்டத்துக்கு வந்தால் மாலையில் தான் வீடு செல்வோம். அந்தளவு எம்முடன் இந்த நிலம் ஒன்றிப்போயுள்ளது. எம்மால் வங்கிகளுக்கு சென்று அலைந்து திரியவும், பிணையாளர்களைத் தேடவும் . . . இதற்கு நேரமில்லை. எவ்வித கஷ்டமும் இன்றி கிராமின் கடன் திட்டத்தினால் நாம் விரைவாக கடனைப் பெற்றுக் கொள்ள முடிகிறது .

**திருமதி பி. சித்ராணி, கல்கடவளை, அநுராதபுரம்**

## HNB கிராமினுடன் இணைந்த பிறகு வேறெங்கும் கடன்பெறவில்லை . . .



பகல் பொழுது தடுமாற்றம் மெதுவாக நீங்கிக் கொண்டிருந்தது. தெற்கைப் போன்று வடக்கிற்கும் ஒளியை வழங்கிக் கொண்டிருக்கும் சூரியன் தனது நாளாந்த கடமையை மெதுவாக நிறைவு செய்து கொண்டிருந்தது. யாழில் இருள் சூழ்ந்து கொண்டிருக்கும் போது நாம் யாழ்ப்பாண வீதியில் சென்று கொண்டிருக்கும் போது கோமரி அம்மாவின் சிறிய கடை எமக்கு தென்பட்டது.

இருபது வயதில் இருந்து இந்தத் தொழிலில் எனது தங்கையையும் இணைத்துக் கொண்டு பைட் உற்பத்திகளை “அபிராமி மிக்ஸர்” என்ற பெயரில் செய்து வருகின்றேன். எமது உற்பத்திகள் இந்தப் பிரதேச கடைகளில் விற்பனையாகின்றன. நாமும் ஒரு கடையை வைத்து சந்தைப்படுத்துகிறோம். காலையில் இருந்து மாலை வரை சுமார் இருபத்தைந்து முதல் முப்பது கிலோகிராம் வரை மிக்ஸர் உற்பத்தி செய்கிறோம். திருவிழாக் காலங்களில் இதனைவிட அதிகமாக உற்பத்தி செய்வோம். நான் இதுவரை கிராமின் நிறுவனத்தில் இரண்டு இலட்சம் வரை கடனாக பெற்றுள்ளேன். கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்ட பின்னர் வேறு இடங்களில் கடன் பெறவேயில்லை. ஏனென்றால் அவ்வாறு கடன்பெற தேவையேற்படாதவாறு சிறப்பான சேவையையும் தேவையான போது கடன் தொகையை பெற்றுக் கொடுப்பதற்கு அன்பான கிராமின் உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள்.

**வீ.கோமாரி அம்மா, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

## HNB கிராமின் நிறுவனம் என்றும் எமது வியாபாரத்துக்கு கைகொடுக்கும் . . .



யாழ்ப்பாணத்தில் காணப்படும் பல்வேறு வியாபாரங்களில் பித்தளைத் தொழிலில் எழுத்து வெட்டுதல், பெயர்ப்பலகை போன்ற கைத்தொழிலை திருமதி லதா சிறப்பாக முன்னெடுத்து வருகிறார். தனது மகன் மற்றும் இன்னொரு ஊழியருடன் நடத்தப்படும் இந்த வியாபாரம் தொடர்பில் லதா எம்மிடம் இவ்வாறு தெரிவித்தார்.

20 வருடங்களுக்கு முன்னர் நான் இந்தத் தொழிலை ஆரம்பித்தேன். எமக்கு கிடைக்கும் கேள்விக்கு ஏற்ப பித்தளையிலான எழுத்துக்கள், கருங்கல் எழுத்துக்கள் ஆகியன வடிவமைக்கப்படுகின்றன. எனது வியாபாரத்தை நடத்துவதற்கு தேவையான பணத்தை பெற்றுக் கொள்வதற்காக 2004ஆம் ஆண்டு கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். பல வங்கிகளுக்கும் சென்ற போதும் எனது நோக்கம் நிறைவேறாது சோர்வடைந்திருந்த சந்தர்ப்பத்தில் தான் நான் கிராமின் நிறுவனம் தொடர்பில் அறிந்து கொண்டேன். அன்று கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவராக இணைந்து கொண்டது முதல் இன்று வரை இந்நிறுவனத்தில் தொடர்ந்து வாடிக்கையாளராக இருப்பதற்கு எனது வியாபாரத்துக்கு தேவையான போது தேவையான அளவு கடனை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கும் மிகவும் கௌரவமாகவும் அன்பாகவும் பழகி எமது வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு வழங்கும் பங்களிப்பு அளப்பரியது.

**ஜி. லதா,யாழ்ப்பாணம்.**

# புதுமைமிகு உலகம்

## வளர்ச்சி




ஆரம்பம் முதல் இன்று வரை பரிமாண வளர்ச்சி அடைந்துள்ள உலகின் பிரசித்தி பெற்ற கொக்கா கோலா போத்தலின் தோற்றம்

## முதலாவது Mc - Donald நிலையம்




உலகப்புகழ் பெற்ற உணவுச்சாலையான மெக்டொனால்ட் நிலையத்தின் ஆரம்பத் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள். றிச்சட் ஜேம்ஸ் மெக்டொனால்டின் கையொப்பத்தை மேலே காணலாம். 1940ஆம் ஆண்டு கலிபோர்னியா நகரின் சென்டர்னாடினோ பிரதேசத்தில் மெக்டொனால்ட் ஆரம்பிக்கப்பட்டது.



காண்டாமிருகத்தின் தோல் மிகவும் வலிமையானதாகும். இதன் தோல்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லை



உலகின் மிகப்பெரிய பூங்காவான கிறீன்லாந்து Green Land Park 375000 சதுர பரப்பளவு உடையது. இது கலிபோர்னிய மாநிலத்தை விட இரு மடங்கு பெரியது.



நத்தை ஒரு தடவை மூச்சைவிட்டால் மூன்று வருடங்கள் நித்திரை செய்ய முடியும்.



அண்ணளவாக நாளாந்தம் உலகில் 400000 குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றில் 140000 வரை மரணிக்கின்றன.



விநாடிக்கு ஆயிரம் தடவைகளுக்கு மேல் கூடுகளை அமைக்கும் வல்லமை கொண்டது சட்டிக்குளவி.




உலகின் மிகப்பெரிய விகாரையாக இந்தோனேசியாவின் "போரோபுதுர்" விகாரை கருதப்படுகிறது. இங்கு 500இற்கும் அதிகமான புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.



நீங்கள் தொடர்ச்சியாக ஒரு மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் Head Phone பாவித்தால் செவிப்பறையில் 700க்கும் அதிகமான பக்கரீறியாக்கள் உருவாகின்றன.

நீங்கள் மற்றொருவரின் வீடு செல்கையில் பாதணியை கழற்றிவிட்டு செல்வது வீட்டாருக்கான மரியாதையாகும்.

# தேவையில்லை என்ற ஒன்றும் இல்லை. ஒன்றுமே இல்லை.

அப்போது நான் தாதியர் கல்லூரியில் இரண்டாமாண்டு மாணவி. எமது பேராசிரியர் அன்று கடினமான வினாப்பத்திரமொன்றை எமக்கு பகிர்ந்தளித்தமை என்றாவது ஒருநாள் திடீரென நாம் பாடத்தில் கவனமாக இருக்கிறோமா என்பதை பரிசீலித்து பார்ப்பதற்காகும். எனக்கு கல்வி கற்பதில் மிகவும் ஆர்வம். புயலொன்று திடீரென வீசியதைப் போல் கேள்விகளை நான் விரைவாக செய்து முடித்தேன். எனினும் கஷ்டமான கேள்விகள் சில இறுதியில் காணப்படுவது கேள்வித்தாளின் பொதுவான விதிமுறையாகும்.

எமது பாடசாலையை சுத்தம் செய்யும் வேலைக்காரியின் பெயர் என்ன? இந்தப் பெயர் சற்று கேலிக்குரியதுதான். அதில் எடுப்பதற்கு ஒன்றும் இல்லை. நான் அப்படியே நினைத்துக் கொள்கிறேன்.

நாளாந்தம் பாடசாலையை சுத்தமாக்கும் அவளை தினமும் நான் சந்திப்பதுண்டு. மிகவும் உயரமான பெண்ணாகும். அண்ணளவாக ஐம்பது வயதை தாண்டிய பெண்ணென்று கூற முடியும். அவளது தலைமயிர் கறுமையாகும். அது மாத்திரமன்றி அவளைப்பற்றி எனக்கு வேறென்ன தெரியும்? யாரே கேட்டிராத அந்தப் பெயரை எவ்வாறு நான் கூற முடியும்?

இறுதிக் கேள்விக்கு பதிலளிக்காமல் வினாப்பத்திரத்தை ஆசிரியரிடம் கையளித்தேன். வகுப்பறை முடிவதற்கு சில விநாடிகள் இருக்கும் போது ஒரு மாணவி எழுந்து நின்று, இறுதிக் கேள்விக்கு புள்ளிகள் வழங்கப்படுவது குறித்து இந்த வினாப்பத்திரம் தாக்கம் செலுத்துமா என்று ஆசிரியரிடம் வினவினார்.

"ஆம். நிச்சயமாக". பேராசிரியர் பதிலளித்தார். "உங்கள் வாழ்நாளின் ஆரம்ப காலத்தில் நீங்கள் சந்தித்தவர்கள் பற்றி அறிந்திராத பல விடயங்கள் இருக்கலாம். அந்த முக்கியமான, உங்களுக்கு எதுவும் தெரிவிக்காமல் சிறிய புன்சிரிப்புடன் உபசரித்து செல்லும் தேவையற்றவரை சார்ந்ததாகும். அவர்களுக்கு உங்களது பார்வை செல்ல வேண்டும். உங்களது பார்வை மாத்திரமின்றி, கௌரவம் மற்றும் அரவணைப்பும் அவர்களை சென்றடைய வேண்டும்".

என்றும் ஞாபகத்தில் இருக்கும் அந்த உன்னத பாடத்தை அன்று நான் கற்றுக் கொண்டேன். அது மாத்திரமின்றி, தேவையில்லை என்று நான் அலட்சியமாக அன்பான அந்தப் பெண்ணின் பெயரை டொரதி என்று நான் அறிந்து கொண்டமையாகும்.

**இணையத்தளத்தில் இருந்து**



## கண் இமைக்கும் போது



அன்பான மனைவி கடன் பெறும் போது
ஓய்வில்லை தவணைப்பணம் முடியும் வரை
கரங்களில் சஞ்சிகையுடன் நாளாந்தம்
தவமிருந்து "மெஹெவர" இருள் அகற்றும்

**வாசகர் :- திலின திஸாநாயக்க படம்:- நிர்மாண குணசேகர**

# கவிதைச் சாளரம்

## ட்ரெபிக்

சிவப்பு வெளிச்சத்தில் நிறுத்தி நிறுத்தி
மக்களின் வெறுப்பை பெற்று
வாய் முனு முனுத்துச் செல்லும்
அந்த நேரம் யார் செய்த பாவமோ

பிரேக்குடன் போர்புரியும் எஸ்லேட்டர்
சற்று மிதித்ததும் எரிந்தது பச்சை விளக்கு
என்ஜினை விஞ்சி குலுங்கியது மனமே
இதில் குறையுள்ளதா "மனிதநேய(ம்)த்தில்"

நேரமானால் பிரச்சினை நாம் செல்லும் இடத்தில்
அவசரமாக நாம் சென்றால் கிடைப்பது தண்டப்பத்திரம்
கண் இமைக்கும் நேரத்தில் சகலதும் நடந்தேறும்
வாகனத்தினால் எம் உயிரே . . .

**கே.டி.சி. லலிந்த**



## நீ

நிலவே நிலவும் நீயே
மலரின் மொட்டும் நீயே
உலகுக்கு ஒளியைத் தருவதும்
குளிர்மையை தருவதும் நீயே
சூரிய வெளிச்சத்தை தந்துதவி
ஊற்றெடுக்கும் அருவியின்
இனிமையான குரலுடனான
பாடலையும்
கொண்டுவந்தது எனக்கு
தந்ததும் நீயே

**டபிள்யு.சமீர இந்ரஜித் பெரேரா**
**பொலன்னறுவை கிளை**

## எனது உள்ளம்

" சக்கரம் போன்ற
நண்பர் கூட்டத்தில்
நீயும் ஒருவனே
திடீரென கழன்றதால்
உடைந்தது
எனது உள்ளமா?"

நுவன் குமார
கல்கமுவ




## அன்பான மகளுக்கு . . .

உன்னைத் தொட்டால் எந்தன் நெஞ்சு
உவகை கொட்டுது - அந்த
சின்னக் கண்ணை பார்த்தால் எனக்கு
கற்பனை வளர்கிறது எனது இளம்பருவம்

கையை ஆட்டும் போது பாப்பா
காவியம் பிறக்குது - நீ
தாவி வரும் போது - எனக்கு
மெய்யே சிலிர்க்குது தவறிவிழும் போது

பல்லு இல்லா முரசைப் பார்த்து
பாவம் என்று - உந்தன் பாலைப் போன்ற
மனசு கண்டு பாசம் சுரக்குது - எமக்கு
பெள்னம் பெரிய உலகிலே

- சுஜித் குமார




# தொழில்முயற்சியாண்மையை அறிந்து கொள்வோம்

எந்தவொரு வெற்றிகரமான புதிய வணிக முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்கு முதலில் முயற்சிகள் காணப்பட வேண்டும். அவ்வாறே அந்த வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு பிரதானமாக காணப்படுவது தொழில் முயற்சியாண்மையாகும். புதிய வியாபார எண்ணக்கருக்களை ஆரம்பித்தல் அல்லது நடத்தி வரும் வணிகத்தில் படைப்பாற்றல் மிக்க மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பன தொழில் முயற்சியாண்மை என்ற எண்ணக்கருவிலாகும். அதனால், தொழில் முயற்சியாண்மை தொடர்பாக வர்த்தகர்களும், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் நபர்களும் இதன் அடிப்படை தத்துவங்களை அறிந்து பயனடைவீர்கள் என நம்புகிறோம்.

### தொழில்முயற்சியாண்மையை வரைவிலக்கணப்படுத்தல்

- புதிய ஒன்றை தேடுதல் அல்லது புதுமையை வழங்குதல் தொழில் முயற்சியாண்மையாகும்.
- வணிக வாய்ப்புகளை அடையாளம் கண்டு மனிதவளம் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக புதுமையை வழங்குதல் தொழில் முயற்சியாண்மையாகும்.

### தொழில்முயற்சியாண்மை எண்ணக்கருவின் வெளிப்பாடு

தொழில்முயற்சியாண்மை என்ற பதத்துக்கு ஆங்கிலத்தில் Entrepreneur என்றும் இது Entreprendre என்ற பிரெஞ் மொழியில் இருந்து வந்ததாகும். இதன் அர்த்தமானது ஏதாவது முயற்சியை ஏற்றுக் கொள்ளல் அல்லது வழங்குதல் என்று பொருள்படும். சந்தர்ப்பங்களை தேடிச் செல்லல், புதிய படைப்புகள், புதுமையை வழங்குதல் போன்ற அர்த்தங்களையும் கொண்டுள்ளது.

### படைப்பாற்றல் : Creativity மற்றும் புதுமையை வழங்குதல் : Innovation

தற்போது இருக்கும் நிலையை விட உயர்மட்டத்தில் பொருள் அல்லது சேவையை வழங்குவதற்கான திறன் படைப்பாற்றலாகும்.

அவ்வாறே புதிய ஒன்றை கண்டுபிடித்தல் புதுமையை வழங்குதல் என பொருள்படும்.

புதமையை வழங்குதல் கீழ்வரும் அடிப்படையில் இடம்பெறும்.

1) புதிய உற்பத்திகளை உருவாக்குதல் : New form product)
2) புதிய உற்பத்தி முறைகளை அபிவிருத்தி செய்தல் : New production method
3) புதிய சந்தைகளை தோற்றுவித்தல் : New market
4) புதிய அமைப்புகளை உருவாக்குதல் : New form of organization

இதனடிப்படையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கான படைப்பாற்றல் காணப்பட வேண்டும். தற்போது புதுமையான எண்ணங்கள் மேலும் விருத்தியடைந்துள்ளதுடன் புதிய வர்த்தக படைப்புகளை ஏற்படுத்தல் தொழில் முயற்சியாண்மையாக புதிய வியாபாரங்களை ஆரம்பித்தல் முயற்சியாளர் என வரையறுக்க முடியும். தேசிய தொழில் அமைப்பின் வறையறையின்படி புதிய வர்த்தக முயற்சியொன்றை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்துவதற்கான திறன் தொழில் முயற்சியாண்மையென அறிவித்துள்ளது.

இதுவரையில் தொழில்முயற்சியாண்மை எண்ணக்கரு விரிவடைந்துள்ள முறை தொடர்பில் வரைபடம் 01 விளக்கப்பட்டுள்ளது.

### அபாயம் மற்றும் முயற்சியாண்மை


முயற்சியாண்மையில் வியாபார அபாயம், நட்டமடைதல் மற்றும் முதலிடும் வளங்களுக்கு எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்காமை.

அபாயங்களை குறைத்துக் கொள்ள கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்

எ முறையான திட்டங்கள்
எ உள்ளக மற்றும் வெளியக நபர்களின் அனுபவங்களைப் பெறல்
எ திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்
எ ஒழுங்கமைத்தல்

முயற்சியாளனுக்கு நட்டம் ஏற்படுமா? இல்லை என்ற கூற்று விவாதத்துக்குரியது. சில கல்விமான்களால் முயற்சியாண்மையானது நட்டத்தை தாங்கிக் கொள்ளுதல் என்று அறிமுகப்படுத்தியுள்ளார்கள். (Bearing risk) அதாவது நட்டத்தை ஏற்றுக்கொள்வது முயற்சியாளனின் ஒரு பகுதி என குறிப்பிடப்பட்டுள்ளது.

Knight என்பவரின் கூற்றுப்படி முயற்சியாளன் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடுவது கஷ்டமான விடயமென்று கூறியுள்ளார். எவ்வாறாயினும் "சூம்பீட்டர்" முயற்சியாளன் இடர்களை ஏற்றுக் கொள்பவன் என்பதை மறுத்துள்ளார். அவர் குறிப்பிடுவது முதலாளித்துவ வர்த்தகர்களே இடர்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று. பல முயற்சியாளர்களின் வெற்றியானது இடர்களை கண்டு அஞ்சாமல் இருப்பதனலாகும்.




(படவிளக்கம் 01)



சந்தகெலும் ஜயதுங்க,
கணக்காளர்
எச்.என்.பி.கிராமின்
பைனான்ஸ் லிமிட்டெட்

இருளில் தெரியாவிட்டாலும் நிழல் எங்களை விட்டு அகலாது.

## நாளின் இனிமையான எட்டு மணித்தியாலங்கள்

பாகம் 3

# முகாமைத்துவ நுட்பமும் ஊழியர் நோக்கும்

கடந்த இதழின் இறுதியில் தோட்டக்காரர் மந்திரியாக வரமுடியுமா என்று நாம் உங்களிடம் ஒரு வினாவை கேட்டு, முதலாவது விடையாக தோட்டக்காரனினால் மந்திரியாக வரமுடியுமென்று தெரிவித்திருந்தோம். அது எவ்விதம்? ............ எமது வாழ்வில் பரம்பரை பரம்பரையாக கடைப்பிடித்து வந்த பழக்கவழக்கங்களை பயிற்சி பெறுவதன் மூலம் மாற்றிக் கொள்ள முடியும். தோட்டக்காரரை மந்திரியாக மாற்றுவதற்கு மனிதவள பயிற்சி அத்தியாவசியமாகும். வொட்சன் என்ற மனநல நிபுணர் தெரிவிக்கையில், ஆரோக்கியமுள்ள பன்னிரண்டு குழந்தைகளை அந்த மனிதரிடம் ஒப்படைத்தால் அதில் எழுமாறாக எந்தவொரு குழந்தையையும் பெற்று தான் தெரிவு செய்த அந்தக் குழந்தையை வைத்தியராகவோ, சட்டத்தரணியாகவோ , தச்சனாக, மேசனாக போன்ற உயர் தொழில்கள் புரியும் நபராக மாற்றியமைப்பதுடன் பிச்சைக்காரராக, கொள்ளைக்காரனாக போன்ற கெட்ட குணங்கள் கொண்ட மனிதராகவும் உருவாக்க முடியும். 1820ஆம் ஆண்டளவில் வொட்சன் இவ்விதம் கூறுவதற்கு மனிதருக்கு பயிற்சி வழங்கியுள்ளோம் என்பதை உறுதிப்படுத்துவதற்காகும். எந்தவொரு நிறுவனத்திலும் உற்பத்தி திறன் பாதிப்புக்கு தோட்டக்காரர்கள் காரணமென்பதை கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்களின் மூலம் அறிந்து கொள்ள முடியும். எவ்வளவு நல்ல உபகரணங்கள் காணப்பட்டாலும், புதிய வடிவமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தினாலும், ஏனைய வசதிகள் செய்து கொடுத்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவது தோட்டக்காரர்கள் என்றால் அந்த நிறுவனம் எதிர்பார்க்கும் உற்பத்தி திறனை அடைந்து கொள்வது கஷ்டமான விடயமாகும். பிரச்சினை, முரண்பாடு, சலசலப்பு போன்ற நிலைமைகள், கவனஈர்ப்பு போன்ற சகல பிரச்சினைகள் நிறுவனத்துக்கு ஏற்படும் போது அதற்கு காரணமானவர்களை குறைகூற கூடாது. அவ்விதம் குற்றம் சுமத்தினால் தமது ஆளுமையில் குறை காணப்படுகிறதே அன்றி குற்றம் செய்யும் நபர்களின் அந்த கெட்ட குணம் மேலும் வளர்ச்சியடையும். இதற்கு பதிலாக நாம் அந்த ஊழியர்களை அழைத்து அவர்களின் பிரச்சினைகளுக்கு காரணமான விடயத்துக்கு பயிற்சிகளை வழங்க வேண்டும்.

நாட்டின் பிரசித்தி பெற்ற நிறுவனமொன்று நிதிக்கட்டமைப்பு மாற்றம் மற்றும் உற்பத்தி திறன் செயலமர்வொன்றுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கு பணிப்பாளர் என்று எனக்கு கூறப்பட்டது.... "பல்வேறு பிரச்சினைகள், எமது நிறுவனத்தில் ஏதேனும் நல்ல காரியங்கள் செய்தால் அதற்கு எதிராக தொழிற்சங்கத்தினர் ஈடுபடுகின்றனர். எவ்வாறாயினும் நாம் இரண்டு நாட்கள் பயிற்சி செயலமர்வொன்றை நடத்தினோம். இந்த பயிற்சி செயலமர்வில் தொழிற்சங்கத் தலைவரும் கலந்து கொண்டார். நிறுவன முகாமையாளர், இவர்கள் மிகவும் குழப்பக்காரர்கள் என்று கூறினார். நான் அவர்களை அவ்விதம் நோக்கவில்லை. மற்றவர்களைப் போலவே நான் அவர்களையும் சரிசமமாக நடத்தினேன். இரண்டு நாள் செயலமர்வில் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு குழுவாக இணைந்து கொண்டனர். இரண்டாம் நாள் இறுதி நேரத்தில் குழுவினர் வீடு செல்ல முற்படும் போது அனைவரினது கண்களிலும் கண்ணீர் நிரம்பியிருந்தது. குழப்பிவிடுவார் என்று அறிமுகப்படுத்திய தொழிற்சங்கத் தலைவர் தான் அதிகமாக அழுதார். அதே மாதிரியான இன்னுமொரு செயலமர்வு அந்த நிறுவனத்தின் வேறொரு பிரிவினருக்கு நடத்தப்பட்டது. முதல் செயலமர்வில் கலந்து கொண்ட தொழிற்சங்கத் தலைவர் இந்த செயலமர்வில் ஏனைய ஊழியர்களை கலந்து கொள்ளச் செய்வதற்காக பல்வேறு தியாகங்களைச் செய்தார். செயலமர்வு நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர் என்னுடன் இருந்து பல்வேறு உதவிகளை செய்து கொடுத்தார் நிறுவனத் தலைவர்களுக்கு இந்த சம்பவம் பாரிய வியப்பாக இருந்தது. இந்த விடயங்கள் சாதாரண வாழ்க்கையில் ஏற்படக்கூடிய யதார்த்தம் என்பது மனநல நிபுணர்களுக்கு நன்கு தெரியும். நிறுவனத்தின் உற்பத்தி திறன், இலாபமடைதல், நிறுவனம் நட்டமடைதல் ஆகிய மனிதருக்கும் உள்ளத்துக்கும் இடையில் காணப்படும் வார்த்தைகள் அல்ல. இவை மனிதருடன் நேரடியாக தொடர்புபட்ட விடயங்களும் அல்ல. அன்பு, கருணை, பாசம், உற்சாகமூட்டல், வரவேற்றல், புரிந்து கொள்ளல், படைப்பாக்கத்திறனுக்கு முன்னுரிமை அளித்தல், நிலையான மற்றும் சாதாரணமாக செயற்படல் ஆகிய குணங்களே மனிதனுடையதாகும். தொடர்புடையதாகும். மனிதனின் உள்ளத்தை பாதிக்கும் குணங்கள் மற்றும் வார்த்தைகள் ஊடாக மொழியினால் மனிதனை தொடர்புபடுத்தும் எந்தவொரு நிறுவன ஊழியரையும் நிறுவனத்தின் இலக்கை நோக்கி செல்வதற்கான குழுவாக மாற்றியமைக்க முடியும். இதற்காக முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் நிறுவனத்தின் இலக்கை நோக்கி செயற்படும் குழுவாக மாற்றியமைக்க முடியும். இதற்கு முகாமைத்துவமும், ஊழியர் படையும் அந்நியோன்யமாக செயற்படுவது அவசியமாகும். நிறுவனத்தின் நீண்டகால மற்றும் குறுங்கால இலக்கினை அடைந்து கொள்வதற்காக தற்போதைய திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்த உள்ள செயற்பாடுகள் தொடர்பிலும் ஊழியர்களிடம் இருந்து நிறுவனம் எதிர்பார்க்கும் பங்களிப்பு மற்றும் பணிகள் போன்றவற்றை உள்ளக ரீதியாகவும் மற்றும் வெளியக ரீதியாகவும் நிறுவனம் வழங்கவுள்ள பங்களிப்பு தொடர்பில் ஊழியர்களிடையே போதுமான அறிவினைப் பெற்றுக் கொடுத்தல் கட்டாயமாகும்.

ஆளுமைப் பயிற்சி
விசேட நிபுணர்
சட்டத்தரணி, கலாநிதி
குமா இத்தல்கம



மனிதன் எந்தளவு உயர்நிலையை அடைவான் என்று குறிப்பிட முடியாது.

# Atlas சித்திரக் கலை நண்பர்கள்

## சிறுவர்களின் கைவண்ண பகுதி

"சித்திர கலை நண்பர்கள்" வரைதல் பகுதி எச்.என்.பி. கிராமின் உத்தியோகத்தர் களுக்கானது என்பதுடன் உங்கள் பிள்ளைகளின் படைப்புகள், ஆக்கங்களை பிரசுரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. "சித்திர கலை நண்பர்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும் **சிறந்த மூன்று படைப்புகளுக்கு சிலோன் பென்சில் நிறுவனத்தினால் (எட்லஸ்) பெறுமதிமிக்க பரிசுக் குவியல்கள் மூன்று வழங்கப்படுவதுடன்** நீங்கள் வரைந்து அனுப்பும் தாளின் பின்பகுதியில் எட்லஸ் அல்லது ஹொம்ரன்பஸ் கலர் பெட்டியின் இலட்சினையை ஒட்டி அனுப்பவும். உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை, படைப்புகளை பிரசுரித்து இதன் அனுகூலங்களை பெற்றுக் கொள்ளுங்கள். **உங்கள் பிள்ளைகளின் படைப்புகளை பதிப்பாசிரியர், கைவண்ணப்பகுதி, எச்.என்.பி.கிராமின் கட்டிடம், இல. 168, நாவல வீதி, நுகெகொடை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**



பூந்தோட்டம்
பெத்மி ரனுல்யா முதலிகே - வயது 04
(உதய இந்திக முதலிகே - ஹொரனை கிளை)



எனது தங்கை வீட்டுக்கு வந்த போது
எம்.ரி. உதுல் புத்மின தந்திரிகே - தரம் 2
(புத்திக தந்திரிகே - தலைமைக் காரியாலயம்)



எனது குடும்பம்
எஸ்.எம். நிதினி தினேத்மா - பாலர் வகுப்பு
(எஸ்.எம்.மகேஸ் உதய - அம்பலாங்கொடை கிளை)



நான் பார்த்த கப்பல்
விதுசி விமத்கா ஜயவீர - ஜே.எம்.சி. பாலர் பாடசாலை
(ஈ.பி.ரி.எஸ். ஜயவீர - தலைமைக் காரியாலயம்)



திரு. சமிந்த பிரபாத்
எம்.எம். லஹிரு நிர்மால் - தரம் 9
(எஸ்.எம். மகேஸ் உதய - அம்பலாங்கொடை கிளை)



முயலும் ஆமையும்
கே.பீ. மிஹிர் நேத் நுவன் - தரம் 4
(பேரலபானாதர)



பழத்தோட்டம்
கே. மல்மி காவியா - தரம் 3
(ரஞ்சன் தர்மகீர்த்தி - புத்தளம் கிளை)

## "Atlas சித்திர நண்பன்" (ஜனவரி - பெப்ரவரி இதழலில்) வெற்றி பெற்றவர்கள்

- பீ.கே. நதுன் ஜயசங்க
  ரொஹான் பெரேரா அவர்கள்
  HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட், நாவலப்பிட்டி
- தினதி அபேசேகர
  ரோஹன அபேசேகர அவர்கள்
  HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட், வெலிமடை
- ஜே.ஏ. மலீஷ ஹிருஷான்
  ஜே.ஏ. சமன் ஹேமஜித்
  HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட், புத்தளம்

## சித்திரங்கள் வரைந்து பரிசு பெற்ற சிறுவர்கள்



தினதி அபேசேகர | எஸ்.எம். லஹிரு நிர்மால் | பீ.கே. நதுன் ஜயசங்க | ஜே.ஏ. மலி' ஹிரு'ான் | சிதும் ஆலோக பெர்ணாந்து | மினுதி மனுதுலி எதிரிசிங்க

மெஹெவர கடந்தவார இதழில்கள் இரண்டிலும் சித்திரங்கள் வரைந்து தெரிவு செய்யப்பட்ட சித்திரங்கள் வரைந்த சிறுவர் சிறுமியருக்கு அட்லஸ் நிறுவனத்தினால் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசுகளைப் பெற்ற சிறுவர்களைப் படத்தில் காணலாம். இதேவேளை, HNB கிராமின் நிறுவன சகல ஊழியர்களின் பிள்ளைகளும் "அட்லஸ் சித்திர நண்பர்" பகுதிக்கு ஆக்கங்களை வரைந்து அனுப்புமாறு நாம் உங்களை அன்பாய் வேண்டுகிறோம்.

## புதுவருட சிறுகதை

# வசந்தம் மீண்டும் வந்துவிட்டது...



தந்தையின் வருகை சற்று தாமதமாகியுள்ளதை உணர்ந்து வீட்டு வாசல் கதவின் அருகே சிறுவன் பினர கண்களை சிமிட்டாமல் உற்று நோக்கிக் கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சுட்டிப் பையன் பினரவைப் பார்ப்பதற்கு ஆவலாக இருக்கும் அந்த நொடி மாலகவின் ஞாபகத்துக்கு வந்தது. பினரவை நினைக்கும் போது மாலகவின் சிறுவயது தோற்றத்துக்கு ஒப்பானது.

“அம்மா . . . அப்பா இன்னும் வரவில்லை”

“ அம்மா, ஏன் மகன். . . டிரபிக்கில் சிக்கியிருப்பார்”

மகனின் முகபாவனை மாற்றமடைந்தது எனக்கு தெரிந்தது.

“அப்பா வருவது வாரத்துக்கு ஒரு முறை. அன்றும் லேட் . . அம்மா. . எம்மோடு அம்மாவும் வரவும் . . நீங்கள் என்றும் வீட்டில் தானே. . .”

உள்மூச்சை எடுத்து வெளியில் அனுப்ப மறந்து விட்டேன்.

“எனக்கு முடியாது மகன் . . . அம்மாவுக்கு ஆசையில்லையா எம்மோடு வருவதற்கு. நான் வீட்டில் இருக்கிறேன். . . மகன்.. நீங்கள் சென்று வாருங்கள்”

“அம்மா இதைத்தானே ஒவ்வொரு நாளும் சொல்றீங்க. . . அப்பாவோடு கோபமாக இருக்கிறீர்கள் போல”

எமது பிரச்சினை மகனுக்கும் தெரிந்து விட்டதை அப்போதுதான் நான் அறிந்தேன்.

“அம்மா, இவ்வருட புதுவருடத்தில் அப்பா எனக்கு நிறைய உடைகள் வாங்கித்தருவதாக கூறினார்”

“புதுவருடத்துக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கிறது மகன்”

“அந்த நாட்களில் அதிகளவான மக்கள் கடைகளில் பொருட்களை வாங்குவார்களாம்”

மாலக்க எப்போதும் அப்படித்தான். எதனையும் காலம்பார்க்காமல் செய்வார். அந்த நாட்களில் உடைகள் வாங்க செல்லும் போது சனக்கூட்டத்தில் மாட்டிக்கொள்ள வேண்டும். அவ்வாறான ஞாபகம் எனக்கு வந்ததும் எனது கண்களில் இயற்கையாகவே கண்ணீர் வந்தது. . .

“அம்மா . . அப்பா வந்துவிட்டார் . . . நான் போகிறேன் . . .”

“சரி . . மகன் . . . கவனமாக . . . கடவுள் துணை . .”

“நான் கூறியதற்கு பதிலளிக்க மகன் அருகில் இல்லை. அப்போது மாலக்க திறந்திருந்த வீட்டின் கதவின் ஊடாக உள்ளே வந்து ஏதோ ஒன்றை கூறுவது எனக்கு கேட்டது. மாலக்க சிரித்தவாறு என்னை பார்த்தார். . . எனது உள்ளத்தில் இருந்ததை வெளிப்படுத்த அவருக்கு அந்தளவு கஞ்சத்தனம். அந்தச் சிரிப்பு எனது வாழ்நாள் முழுதும் கிடைத்த பரிசு. பயத்தில் அழுதுவிடுவேன் என்பதற்காக எனது கண்கள் இயற்கையாகவே தரையை நோக்கி பார்த்தது. வாகனம் வாசல் கதவின் அருகே வந்தடைந்தது. . . எனது உள்ளமும் அங்கு சென்றது. வந்த வேகத்தில் . . . அந்த ஞாபகங்கள் மறக்க முடியாது.

எமக்கு ஏன் இவ்விதம் நடந்தது? எனது உள்ளத்துக்கும் இந்தக் கேள்விகள் இன்றும் புரியதா ஒன்றாக இருக்கிறது”

“அமாவி . . என்ன பபா… ஏன் நீங்கள் அவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்”

எந்த வேலையையும் செய்வதற்கு மாலக்க எனக்கு இடம் கொடுக்கவில்லை. அது அவரது உண்மையான பாசத்தின் வெளிப்பாடு. நாம் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்த நாட்களாகும். எனது மகன் கிடைத்த பின்னர் அந்த அன்பு தூக்கியெறியப்பட்டது. எனது மகன் புதுவருடத்தில் பிறந்தான். மாலக்க சுபநேரத்தில் பாற்சோறு சாப்பிட ஹொஸ்பிடல் வந்தார்.. .மகன் கிடைக்கும் வரை வங்கிக்கு மேல் அமர்ந்திருந்தார். மகனை பார்த்த அந்த நொடி எனக்கு இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. அந்தளவு மகிழ்ச்சியாக இருந்தார். அந்த வருடத்தை நாங்கள் கொண்டாடிய விதத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. என்றாலும் . . . அனைத்தும் எதிர்பார்க்காத விதத்தில் மாற்றமடைந்தது.

“அமாவி. . . நான் பிரைவேட் செக்கட்ரி ஒருவரை எடுக்க இன்டர்வியு செய்தேன். உனது நண்பிகள் எவரேனும் இருக்கிறார்களா?”

“அவ்விதம் யாரும் இல்லை. . . மாலக்க . . ஏன் அவ்வளவு அவசரம்? செக்கட்ரி ஒருவரா . . .”

“இருக்கும் வேலைகளை பராமரிப்பது கஷ்டமாக இருக்கிறது பபா . . தனிமையில் . .யாராவது ஒருவர் உதவி செய்தால் . . .”

“மகன் . . யாராது பராமரிப்புக்கு இருந்தால் நானாவது உதவி செய்வேன்”

முடியாது. அவள் . . காரியால வேலைகளை செய்யும் பெண் அல்லவா. . . சற்று ஆடம்பரமாகவும் ஸ்டைலாகவும் உடை அணிவது இயற்கையே. . . உடை அணிவதையிட்டு அவளை மதிப்பிட வேண்டாம். அவ்விதம் ஸ்டைலாக அணிந்தாலும் அவள் நல்ல பெண்.

அந்த வார்த்தைகள் என்னை சற்று நிலைத்தடுமாற வைத்தது. எனினும் அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நாளாந்தம் கொஞ்சம் கொஞ்சமாக மாலக்க என்னில் இருந்து விலகிச் செல்லும் போது நான் தனிமையில் இருக்க பழகிக் கொண்டேன். எனது மகனின் நல்லதொரு எதிர்காலத்தை கருத்திற் கொண்டு. . . “இன்று இரவாகிவிட்டது. அதிக வேலைப்பளு. . . இரவு சாப்பாடு தேவையில்லை. . . ஒவ்வொரு நாளும் மாலக்கவின் மாலைநேர நாளாந்த வார்த்தைகள். எனது பிழை . . . வானாளவிய ரீதியில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்த எனக்கு மாலக்க எனக்கு துரோகம் செய்வார் என்று ஒருநாளும் எதிர்பார்க்கவில்லை. . . எனது செவிகளுக்கு நாளாந்தம் கிடைத்த ஒரு சில கதைகளை அலட்சியப்படுத்தாமல் இருந்ததால் மாலக்க, சரணி இருவரும் நீண்டதூரம் சென்று விட்டார்கள் என்பது அப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

“அமாவி”

செனாலியின் குரல் மூலம் எனது மனம் என்னிடம் வந்தது. இன்பத்திலும், துன்பத்திலும் இருந்த நண்பி.

“என்ன? ஆழ்ந்த யோசனை. . . தூக்கிக் கொண்டு சென்றதும் உனக்கு தெரியாதா? ஜன்னல், கதவுகளைக் திறந்து கொண்டு எங்கே . . . மகன் . . .?”

“பைத்தியமா . . உங்களுக்கு . . . மகனை மற்றவர்களால் பராமரிக்க முடியாது. . . மகனுக்கு அருகில் நீங்கள் தான் இருக்க வேண்டும். . .” “அதுவும் சரி . . என்றாலும் . .”

“என்ன? இந்தப் . . பெண்ணுக்கு பொறாமை போல?”

“பைத்தியமா உங்களுக்கு, மாலக்க என்னைப் பற்றி தெரியாத உங்களுக்கு. . .” எனக்கு என்னை விட உங்களின் மீது அதிக நம்பிக்கை உள்ளது. . .”

மாலக்க எனது நெற்றியை முகந்தவாறு அன்று அங்கிருந்து சென்றார் . .. எனினும் . . அந்தக் காரணத்தினால் தான் இன்று நான் தனியொருவராக இருப்பேன் என்பதை ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. . . எனது வாழ்க்கையில் குறுக்கிட்டது சரணி. மாலக்கவின் பிரைவேட் செக்கட்ரி. அவளின் அகங்காரப் போக்கை நான் அவளைப் பார்த்த போது அறிந்துகொண்டேன். அன்று எனக்கு சிரிப்பு வந்தது . . . அவளது நடை நடமாடும் தோரணத்தைப் போன்றதாகும். . .

“மாலக்க அவளை எங்கிருந்து கொண்டுவந்தீர்கள் . . . அவ்வாறான பெண்ணொருவரை தேர்ந்தெடுத்தமை புதுமையாக இருக்கிறது. . .” “அவளுக்கு உங்களைப் போல் இருக்க

“இன்று மாலக்கவிடம் செல்லும் நாள் . . .”

செனாலி என்னை சோகத்துடன் உற்று நோக்கினாள் . . .

“நீ குற்றமற்றவள் . . . அவன் என்றாவது அதனை அறிவான் . . மிகவும் தூரத்தில் இல்லை . . .”

அப்படி செல்ல வேண்டாம் செனா . . . எனது தலைவிதி . . . நான் அவரை வஞ்சிக்க மாட்டேன். அவர் எனது மகனின் தந்தை . . .

“அய்யோ நீ . . . அவனுக்கு சான்றிதழ் கொடுக்க வேண்டாம் . . .” எனது கண்கள் அவளை உற்று நோக்கியது.

“ஏன்? . . என்ன? . . மாலகவுக்கு பிரச்சினையா? உன்னைப் போன்ற ஒரு பெண்ணை கைவிட்ட ஒருவருக்கு பிரச்சினையில்லை என்றால் தான் ஆச்சர்யம் . . . சரணி இன்னுமொரு ஆணுடன் சுற்றித் திரிந்ததை எனது நண்பி பார்த்தாள்”

“நண்பன் ஒருராக இருக்கலாம் அல்லவா”

“அய்யோ”

“அவளது முகத்தில் குத்த வேண்டும். எந்தவொரு பெண்ணாவது பார்ட்டி ஒன்றை ஏற்பாடு செய்வார்களா . . . அதற்கு இவள் . .”

“மற்றவர்களின் துன்பத்துக்காக நான் பார்ட்டி ஒன்றை போடும் அளவுக்கு கெட்டவள் அல்ல நான் செனா”

எனக்காக நீ ஏன் கண்ணீர் வடிக்கிறாய்? . . மாலக்கவுக்காகவா? எனக்கென்றால் நம்பிக்கையில்லை.

“ எனக்கு தெரியும் . . . நீ கெட்டவள் அல்ல. . .” எனக்கு சிரிப்பு வந்தது.

வாழ்க்கையில் பெண்ணொருவருவக்கு ஏற்பட்ட இவ்வாறான சம்பவத்தை எவ்விதம் கெட்ட செயல் அல்லவென்று கூற முடியும் செனா . . .?

இதற்கு பதிலளிக்க முன்னர் மாலகவின் வாகனம் வாசல் கதவின் அருகே வந்து பாரிய ஒலியெழுப்பியது.

“ஏன்? இன்று . . . இவ்வளவு அவசரம் . . .”

மாலக்கவின் முகம் சுருங்கியது. அந்த முகம் துன்பத்தில் துவண்டிருப்பதை என்னால் இலகுவாக புரிந்து கொள்ள முடிந்தது. . . மகன் வாகனத்தில் இருந்து இறங்கும் அந்த சந்தர்ப்பத்தில் மாலக்க சோகத்துடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கண்களில் நீர் ததும்பியிருந்தது. . . மகன் வாகனத்தில் இருந்து இறங்கிய உடன் வாகனம் சற்று ஆடியது. உடம்பும் சற்று ஆடியதுடன் அந்த வேகத்தில் “கடவுள் துணை” பழக்கத்துக்கு உள்ளத்தில் இருந்து வெளிவந்தது. “என்ன. . . உடனடியாக வந்துவிட்டீர்கள் . . . செனாலி மகனை அருகில் அரவணைத்துக் கொண்டார். மகனின் முகம் வாடியிருந்தது . .”

“நாம் உடைகள் எடுக்க கடைக்கு சென்றோம். அங்கு என்டி ஒருவரும் வந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் அப்பாவுக்கு கோபம் வந்தது. அந்த அங்கலையும் அப்பா அடிக்கச் சென்றார். அந்தப் பெண் அப்பாவை தூற்றானாள். அப்பாவும் ஏசினார். பின்னர் அப்பா என்னை கூட்டிக் கொண்டு வந்துவிட்டார். இன்னும் பல டொய்ஸ்களை வாங்கியிருக்கலாம். அந்த என்டி யார் அம்மா . . .? அவருக்கு அம்மாவின் பெயரும் தெரியும் . . . அம்மாவின் பெயரைக் கூறி என்ன சென்னாள் . . . அப்பா அவளின் முகத்தைப் பார்த்து சத்தமாக கத்தினார்”

நான் நாட்காலியின் அமரும் போது எனது கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது . . .மாலகவின் வாழ்க்கையில் மீண்டுமொரு தடவை சறுக்கல் . . .

“ஹலோ . . . அமாவி . . . கோல் . .”

“அமாவி மிஸ் அவர்களா . .”

“ஆம்”

“நான் பியரத்ன . . . சந்தியின் முச்சக்கர வண்டியில் இருந்து”

“ஆம். சொல்லுங்கள் பியரத்ன. . .”

“மிஸ் . . குழப்பம் அடைய வேண்டாம். . . மாலக்க அவர்கள் விபத்தில் சிக்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் . . .”

நானும் மயக்கமடைந்தேன் . . .

“அமாவி”

செனாலியின் குரல் எனக்கு நன்கு கேட்டது.

மாதத்தின் பிறகு

நாளை புதுவருடப் பிறப்பு. மற்றைய நாட்களை விட வீட்டில் சற்று சத்தமாக இருந்தது. மூன்று வருடத்துக்குப் பின்னர் எனக்கும் மகனுக்கும் புதுவருத்தை கொண்டாட வாய்ப்பு கிடைத்துள்ளதாக உணர்ந்தேன். மகனுக்கு ஆறு வயது பிறக்கிறது. அவனுக்கு பிடித்த ஒன்றை அன்பளிப்பு செய்ய உள்ளேன். நடந்தது நடந்துவிட்டது. ஒரு காலை இழந்து மாலக்க தனிமையானார். சரணி ஹொஸ்பிடலுக்கு மாலக்கவை பார்க்க வரவில்லை. எனது முன்னிலையில் அவள் மாலக்கவிடம் டிவோர்ஸ் பேப்பரில் ஒப்பம் வாங்கினாள். காலுக்கு என்ன நடந்தது என்று கூட அவள் கேட்கவில்லை. நான் காலை மாலையில் மாலக்கவுக்கு உதவி செய்தேன். அந்த சந்தர்ப்பத்தில் அவர் எனது கரங்களை பிடித்து மன்னிப்பு கேட்டு அழுதார்.

“பைத்தியமா. . . உங்களுக்கு . . . துன்பத்தில் இருக்கும் போது தூற்றுவதா?”

“இப்போது அவர் தான் செய்த குற்றங்களுக்கு தண்டனை அனுபவிக்கிறார். . . ஏன் . . நானும் தான் அவரை தண்டிக்கிறேன் . . “

“மாலக்கவை நாளை டிஸ்சார்ஜ் செய்வார்கள். நானும் மாலக்கவும் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடினோம். . . மகனுக்காக நான் மாலக்கவை மன்னித்தேன்.

“நாம் . . மீண்டும் மனம்முடிப்போம் . . அமா . .”

எனக்கு டிவியில் பார்த்த விளம்பரம் ஒன்று ஞாபகத்தில் வந்தது. . . எனது தலைவிதி இதுதான் என்று நினைத்துக் கொண்டேன் . . .

“ஆம் அப்பா வந்துவிட்டார் . . .” மகன் சந்தோஷத்தில் குதித்தான். எங்கள் வீட்டில் புதுவருட தினத்தில் பட்டாசு சத்தம் கேட்டது . . . “இன்று தான் எனது உண்மையான பிறந்தநாள் பரிசு . . . புதுவருட பரிசு . . . இரண்டும் ஒன்றாக கிடைத்தது. . . ” மாலக்க என்னை உற்று நோக்கினார் அன்பான பார்வையில். . . அவரின் முகத்தில் புன்சிரிப்பு. அந்த ஆனந்தம் மகனிடமும் காணப்பட்டது. அதுதான் எனக்கு கிடைத்த புதுவருட பரிசு. மாலக்க அவரது கரங்களால் எங்களை அரவணைத்துக் கொண்டார்.



நதீகா கீதாஞ்சலி

இலங்கை சிறுவர் சமுதாயம் எதிர்நோக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் சமூகங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் “பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தை நோக்கி” என்ற தொனிப்பொருளில் HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட்டினால் ஒழுங்கு செய்த விழிப்புணர்வு செயலமர்வின் மற்றொரு கருத்தரங்கு யாழ்ப்பாணம் நகரை மையமாக் கொண்டு கடந்த ஜனவரி 29ஆம் திகதி TCT ஹோட்டல் வளாகத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வின் முதற்படியாக இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கு அமைய அச்சடிக்கப்பட்ட “சிறுவர் துஷ்பிரயோகங்களை நிறுத்திக்கொள்வோம்” என்ற துண்டுப்பிரசுரம் இலங்கையின் சகல பிரதேசங்களையும் சென்றடையும் வகையில் HNB கிராமின் வலையமைப்பின் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இதன் இரண்டாம் கட்டமாகவே இந்த விழிப்புணர்வு செயலமர்வு யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் சதாகாலமும் ஈடுபடும் HNB கிராமின் நிறுவனம், தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து சமூக சேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படும் ஒரு நிறுவனமாகும். “பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தை நோக்கி” என்ற தொனிப்பொருளில் இலங்கை முழுவதும் பரவலடையும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட விழிப்புணர்வு செயலமர்வு அதன் ஓர் அங்கமாகும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட சமூக உளநல அதிகாரியும் (District Psychosocial Officer) சிரேஷ்ட வளவாளருமான கே. கௌதமன் அவர்களினால் விரிவுரை நடத்தப்பட்டது. இந்தச் செயலமர்வின் கருத்தரங்கு இதற்கு முன்னர் நிகவரெட்டி, சிலாபம், மொனராகலை ஆகிய நகரங்களை மையமாக் கொண்டு நடத்தப்பட்டன.

## HNB கிராமின் சிறுவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை...



(HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் பிரதி பொதுமுகாமையாளர் ருவன் பெர்ணாந்து அவர்கள், உதவி பொது முகாமையாளர் மஹிந்த ரத்நாயக்க அவர்கள், பிரதேச முகாமையாளர் ஜோசப் ஜோன் அவர்கள், ஊடக முகாமையாளர் மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி அவர்கள், சட்டத்தரணி தினேஷ் பத்மலால் அவர்கள் உட்பட அழைப்பை ஏற்று கலந்து கொண்டவர்கள் நிகழ்வை ஆரம்பிக்கும் போது)

## திஸ்ஸ சேவை மத்திய நிலைய மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணம்...





பல காலமாக நைலோன் நூல்களினாலான வலைகளைப் பயன்படுத்தி லுனுகம்வெஹர மற்றும் யோதவாவியில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களுக்கு இந்த வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட வேண்டாமென அரசாங்கத்தினால் அறிவுறுத்தியதை அடுத்து அம்மீனவர்கள் பொருளாதார ரீதியிலும், தொழில் வாய்ப்பை மேற்கொள்வதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர். இந்நிலையில் HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் திஸ்ஸமஹராம சேவை மத்திய நிலையத்தின் ஊடாக மேற்படி பிரதேசத்தில் உள்ள மீனவக் குடும்பங்களின் 95 பேருக்கு புதிய கல்வியாண்டுக்கு தேவையான பாடசாலை உபகரணங்கள் கடந்த 28.01.2016 அன்று லுனுகம்வெஹர மற்றும் மஹாதேர மத்திய நிலையங்களில் வழங்கப்பட்டன.

HNB GRAMEEN மெஹெவர

எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட்
இல. 168, நாவல வீதி, நுகேகொடை

டெலி : 0112176262 பெக்ஸ் : 0112825843

ஈமெயில் :- manjula.p@hnbgrameen.lk

வெப் :- www.hnbgrameen.com

மேற்பார்வை :- சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்)

பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி

பக்க வடிவமைப்பு: சிந்தக (அர்ஜுன கிரபிக்ஸ்)

படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

## Happy Birthday

மார்ச், ஏப்ரல் மாதத்தில் பிறந்த தினத்தை கொண்டாடும் எச்.என்.பி.கிராமின் சகோதர உத்தியோகத்தர்களுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. பீ. ரூபதர்ஷன் | ஏப்ரல் 01 | தலைமையகம் |
| திரு. சஞ்சய பிரதீப் | ஏப்ரல் 02 | நிட்டம்புவ |
| திரு. சதுக்க சிம்ஹிர | ஏப்ரல் 02 | பிட்டிகல |
| திரு. நிமேஷ் பிரியதர்ஷன | ஏப்ரல் 02 | ஹொரனை |
| திரு. இசுரு சந்தமல் | ஏப்ரல் 02 | ஹம்பாந்தோட்டை |
| திரு. ரி. காஜன் | ஏப்ரல் 03 | யாழ்ப்பாணம் |
| திரு. கே. செல்வகுமார் | ஏப்ரல் 03 | மல்லாவி |
| திரு. திமுத் சாமர | ஏப்ரல் 04 | பிட்டிகல |
| திரு. பிரபாத் கொடகே | ஏப்ரல் 04 | மொரட்டுவை |
| திரு. மலிந்த அயேஷான் | ஏப்ரல் 04 | நிட்டம்புவ |
| திரு. ஆனந்த ரத்ன | ஏப்ரல் 04 | மாத்தளை |
| திரு. ரசிக பிரசாத் | ஏப்ரல் 05 | கந்தளாய் |
| திரு. எஸ். பவிந்திரன் | ஏப்ரல் 05 | யாழ்ப்பாணம் |
| திரு. உதய ஜயவர்தன | ஏப்ரல் 05 | மொரவக்க |
| திரு. ஜானக சாமர | ஏப்ரல் 06 | கண்டி |
| திரு. மஞ்சுள பண்டார | ஏப்ரல் 06 | மாத்தளை |
| திரு. ரொஷான் குமார | ஏப்ரல் 06 | பலாங்கொடை |
| திரு. ரசிக நுவன் | ஏப்ரல் 06 | கடுவளை |
| திரு. எஸ். விஜயகுமார் | ஏப்ரல் 08 | ஹட்டன் |
| திரு. சாமர கயான் | ஏப்ரல் 08 | தலைமையகம் |
| திரு. பிரசாத் புஞ்சிஹேவா | ஏப்ரல் 08 | நகரக் கிளை |
| திரு. தவராசா ரவிராஜ் | ஏப்ரல் 08 | நெல்லியடி |
| திரு. துமிந்துது டிலன்ஸ | ஏப்ரல் 08 | நிக்கவரெட்டி |
| திரு. எஸ். திபேந்திரன் | ஏப்ரல் 08 | முல்லைத்தீவு |
| திரு. சமில் பெரேரா | ஏப்ரல் 09 | பொலன்னறுவை |
| திரு. மதுக குலரத்ன | ஏப்ரல் 09 | தலைமையகம் |
| திரு. ஷெஹான் மதுரங்க | ஏப்ரல் 09 | களுத்துறை |
| திருமதி ஆஷா லக்மாலி | ஏப்ரல் 09 | நீர்கொழும்பு |
| திரு. நந்தன சம்பத் | ஏப்ரல் 10 | கெக்கிராவ |
| திரு. புஷ்ப எரந்திரஜித் | ஏப்ரல் 10 | கெக்கிராவ |
| திரு. ஒஷான் தினேஷ் | ஏப்ரல் 10 | காலி |
| திரு. ரசஞ்ஜன பண்டார | ஏப்ரல் 10 | மாத்தளை |
| திரு. நிமல் ஜோசப் | ஏப்ரல் 10 | நீர்கொழும்பு |
| திரு. சமீர பெரேரா | ஏப்ரல் 10 | பொலன்னறுவை |
| திரு. ரஷ்மிக த சில்வா | ஏப்ரல் 11 | மாத்தறை |
| திரு. லக்மால் சத்துரங்க | ஏப்ரல் 11 | காலி |
| திரு. ஜனக குமார | ஏப்ரல் 11 | நிக்கவரெட்டி |
| திரு. எஸ். சௌந்தரன் | ஏப்ரல் 11 | மொனராகலை |
| திரு. விதுரங்க பெரேரா | ஏப்ரல் 11 | புத்தளம் |
| திரு. ரமேஸ் பொன்சேகா | ஏப்ரல் 12 | தலைமையகம் |
| திரு. துஷார முகுணமல்வத்த | ஏப்ரல் 12 | தலைமையகம் |
| திரு. கண்ணன் பவிதரன் | ஏப்ரல் 12 | திருகோணமலை |
| திரு. ஷாலித சந்தருவன் | ஏப்ரல் 12 | அம்பாறை |
| திரு. ரமேஸ் அகலங்க | ஏப்ரல் 13 | பண்டாரகம |
| திரு. எம். பதுஷான் | ஏப்ரல் 13 | யாழ்ப்பாணம் |
| திரு. மதுசான் தேசப்பிரிய | ஏப்ரல் 13 | அம்பலாங்கொடை |
| திரு. ஷான் மல்ஷ | ஏப்ரல் 15 | மொனராகலை |
| திரு. லக்மால் சந்தருவன் | ஏப்ரல் 16 | காலி |
| திரு. அசங்க தினேஷ் | ஏப்ரல் 16 | ஹம்பாந்தோட்டை |
| திரு. அசேல மதுசங்க | ஏப்ரல் 17 | கண்டி |
| திரு. நாமல் ஜயசிங்க | ஏப்ரல் 17 | குரநாகலை |
| திரு. எம் இப்ராத் | ஏப்ரல் 18 | பொத்துவில் |
| திரு. அமித் தில்ஷங்க | ஏப்ரல் 18 | பொலன்னறுவை |
| திருமதி. நதீகா ஸ்ரீயானி | ஏப்ரல் 18 | புத்தளம் |
| திரு. யோகராஜ் பிரகாஷ் | ஏப்ரல் 19 | தலைமையகம் |
| திரு. கயான் ரவீந்திர | ஏப்ரல் 19 | நாவலப்பிட்டி |
| திரு. பத்மநாதன் தனுஜன் | ஏப்ரல் 19 | கல்முனை |
| திரு. அசங்க சேனக பெரேரா | ஏப்ரல் 19 | தம்புள்ளை |
| திரு. மொஹமட் றிபாய்டீன் | ஏப்ரல் 20 | பொத்துவில் |
| திரு.புத்திக பலிகக்கார | ஏப்ரல் 21 | தலைமையகம் |
| திரு.சஜீவ பிரியங்கர | ஏப்ரல் 21 | நிக்கவரட்டி |
| திரு. திலான் சஞ்சீவ | ஏப்ரல் 21 | அம்பலாங்கொடை |
| திரு. சாமர தரங்க | ஏப்ரல் 21 | தலைமையகம் |
| திரு. மலித் போதினாகொடை | ஏப்ரல் 21 | கேகாலை |
| திரு. துஷார ஹேஷான் | ஏப்ரல் 22 | பொத்துவில் |
| திரு. இசுரு சிந்தக | ஏப்ரல் 22 | கேகாலை |
| திரு. இசுரு பிரமோத் | ஏப்ரல் 22 | திஸ்ஸமஹராம |
| திரு. சாமர சத்துரங்க | ஏப்ரல் 22 | கெக்கிராவ |
| திரு. பீ.டி. மஹிந்தசோம | ஏப்ரல் 23 | நிட்டம்புவ |
| திரு. கயான் அனுருத்த | ஏப்ரல் 23 | கடுவளை |
| திரு. விவியன் ரிக் | ஏப்ரல் 23 | வத்தளை |
| திரு.எஸ்.தயாளன் | ஏப்ரல் 23 | நுவரெலியா |
| திரு. வஜிர லக்மால் | ஏப்ரல் 23 | நொச்சியாகம |
| திரு. புத்திக குமார | ஏப்ரல் 23 | மாத்தளை |
| திரு. புத்திக போல் | ஏப்ரல் 23 | சிலாபம் |
| திரு. கெலும் நிலங்க | ஏப்ரல் 24 | கந்தளாய் |
| திரு. மகேஷ் மதுசங்க | ஏப்ரல் 24 | ஹம்பாந்தோட்டை |
| திரு. அஜித் புஷ்பகுமார | ஏப்ரல் 25 | கண்டி |
| திரு. உபாலி ஜயசிங்க | ஏப்ரல் 25 | குரநாகலை |
| திரு. அசேல குமார | ஏப்ரல் 25 | ஹோமாகம |
| திரு. ரி. கஜேந்திரன் | ஏப்ரல் 25 | யாழ்ப்பாணம் |
| திரு. கசுன் சமிந்த | ஏப்ரல் 25 | பலாங்கொடை |
| திருமதி. சவினி நிரங்கா | ஏப்ரல் 26 | பதுளை |
| திரு. இந்துனில் கருணாரத்ன | ஏப்ரல் 26 | பதவிய |
| திரு. இசுரு செனவிரத்ன | ஏப்ரல் 27 | பொலன்னறுவை |
| திரு.கயான் சுமேத | ஏப்ரல் 27 | சிலாபம் |
| திரு. கோவிந்த வர்ணகுமார | ஏப்ரல் 27 | தம்புள்ளை |
| திரு. பீ. அலென்குமார் | ஏப்ரல் 27 | முல்லைத்தீவு |
| திரு. இந்திக பத்மகுமார | ஏப்ரல் 28 | பண்டாரகம |
| திரு. அசங்க பிரபாசிறி | ஏப்ரல் 28 | தலைமையகம் |
| திரு. திலங்க பண்டார | ஏப்ரல் 28 | குரநாகலை |
| திரு. மாலக்க நிஷாந்த | ஏப்ரல் 28 | எம்பிலிபிட்டி |
| திரு. ரோஹித கருணாசிங்க | ஏப்ரல் 28 | கல்கமுவ |
| திரு. சானக்க சம்பத் | ஏப்ரல் 28 | களுத்துறை |
| திரு. மனோஜ் ஜயமால் | ஏப்ரல் 28 | கந்தளாய் |
| திரு. கசுன் பிரியங்க | ஏப்ரல் 29 | கண்டி |
| திரு. என்.யுரேன்த | ஏப்ரல் 29 | வவுனியா |
| திரு. ரி. திபாகரன் | ஏப்ரல் 29 | மட்டக்களப்பு |
| திரு. வசந்த குமார | ஏப்ரல் 30 | நாவலப்பிட்டி |
| திரு. சாமர நுவன் | ஏப்ரல் 30 | வெலிமடை |

வெற்றி பெற்றவர்களாக திகழ்வதற்கு அச்சத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.